# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN



## பரிசுத்தம்

பரிசுத்தமுள்ளவன்
இன்னும் பரிசுத்தமாகட்டும்
(வெளி. 22:11)

**TAMILNADU ASSEMBLIES OF GOD NEWS MAGAZINE**

May - June 2021
Volume : 61

ஆண்டு சந்தா ₹ 100/-
Issue : 3

## தமிழ் பிரதேச 72வது வருடாந்திட மாநாடு (9.03.2021)




















## 72வது மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நமது தமிழ் பிரதேச தலைவர்கள்

தலைவர் : Rev. ஸ்டீவ் ஜெயராஜ்
உபதலைவர் : Rev. சுவர்ணராஜ்
செயலாளர் : Rev.T.S. ராஜசேகர்
பொருளாளர் : Rev. ஆண்டனி ராஜன்
கமிட்டி அங்கத்தினர் : Rev.I. கிறிஸ்துதாஸ்

ஆசிரியரிடமிருந்து........!

# பரிசுத்தமும் எழுப்புதலும்



"என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால்... தேசத்துக்கு ஷேமத்தை கொடுப்பேன்" (2 நாளா. 7:14).

கிறிஸ்துவுக்குள் பிரியமான வாசகர்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய பரிசுத்தமுள்ள நாமத்தில் வாழ்த்துக்கள்!

உண்மையான எழுப்புதலைக் காண வாஞ்சிக்கும் நாம் அதற்கான விலைக்கிரயத்தை செலுத்த வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நம்முடைய பாவங்களிலிருந்து முழுமையான மனந்திரும்புதல் முதலாவது அவசியம். இரட்சிக்கப்பட்டவர்கள் மத்தியில் காணப்படும் பாவக்கிரியைகள் மறைய வேண்டும். நம்முடைய வாழ்க்கை தேவனுடைய பார்வையில் செம்மையாயிராமலும், பாவத்தை நம்மை விட்டு நீக்காமலும் நாம் ஜெபித்துக் கொண்டே இருக்கலாம். ஆனால் எழுப்புதலோ ஒருபோதும் வராது. ஆகவே பொல்லாத வழிகளை விட்டு திரும்ப தீர்மானித்து, பரிசுத்தத்தை வாஞ்சித்து கதறுவோமானால் எழுப்புதலை காண முடியும்!

பரிசுத்தத்தையும் எழுப்புதலையும் நாம் பிரிக்க முடியாது. பரிசுத்தம் என்றால் என்ன? கிரேக்கப் பதமாகிய ஹேகியஸ்மாஸ் (hagiasmos) என்பதின் அர்த்தம்-சுத்தம், பிரித்து வைக்கப்படுதல், தேவனுக்கு உரியது என்பதாகும். வேதக்கருத்தின்படி பரிசுத்தம் என்பது கிறிஸ்துவைப் போல மாறுவதாகும். நாம் பரிசுத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமும் அவர் நம்மைக் குறித்து வைத்துள்ள நோக்கமுமாயிருக்கிறது (1 தெச. 4:3,7; 1 பேதுரு 1:16). பரிசுத்த வாழ்வைக் குறித்து வேதம் முழுவதிலும் சொல்லப்பட்டுள்ளது. அப்போஸ்தலனாகிய பவுல் தேவ சித்தமாகிய இந்த பரிசுத்தத்தை நடைமுறை வாழ்க்கையோடு சம்பந்தப்படுத்தி 1 தெசலோனிக்கேயர் 4:1-12 வசனங்களில் கூறுகிறார். அவற்றின்படி வாழும்போது நாம் மெய்யான ஒரு எழுப்புதலை தனிப்பட்ட வாழ்விலும், சபையிலும், தேசத்திலும் காணமுடியும்!

## 1. தனிப்பட்ட வாழ்வில் பரிசுத்தம் *(Personal Life)*

நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து, தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல மோக இச்சைக்குட்படாமல் உங்களில் அவனவன் தன்தன் சரீரபாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து... (1 தெசலோனிக்கேயர் 4:3-7).

நாம் அசுத்தத்திற்கு விலகிப் பரிசுத்தமாயிருக்கவேண்டும் என்பது தேவ சித்தமாயிருக்கிறது. நீதி, நெறி, ஒழுக்கம் இல்லாத தெசலோனிக்கே பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு இதுவே பவுலின் செய்தியாக இருந்தது. இந்த செய்தி ஒழுக்கத்தில் சீரழிந்து வரும் தற்காலத்திற்கும் மிகவும் பொருத்தமுள்ளது. சரீரத்தினால் ஒருவன் செய்யும் எல்லா அசுத்தச் செயல்களும் தேவனுடைய சித்தத்தை மீறுவதாகும். தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் தங்கியிருக்கிற நம் சரீரத்தின் மூலம் நாம் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்று வேதம் கூறுகிறது (1கொரி.6:19,20). ரோமர் 6:11-14 வசனங்களில் நாம் சரீர இச்சைகளின்படி வாழாமல் நம்முடைய சரீரங்களில் தேவன் ஆளுகை செய்ய இடமளிக்கவேண்டும் என்று பவுல் கூறுகிறார். நம்முடைய அவயங்களை (கண்கள், காதுகள், கால்கள், நாவு, மனது) நீதியின் ஆயுதங்களாகத் தேவனுக்கு முற்றிலும் ஒவ்வொரு நாளும் ஒப்புக்கொடுக்க வேண்டும். வாயின் வார்த்தைகளில் குறிப்பாக அனைவரும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில் சொற்களின் மிகுதியில் பாவமில்லாமல் போகாது என்று வேதம் கூறுகிறது (நீதி. 10:19).

மேலும் நாம் பரிசுத்தமாய் வாழ வேண்டுமானால், பூமிக்கடுத்தவைகளையே சிந்தித்துக் கொண்டிருக்காமல், நம்முடைய மனதைக் கிறிஸ்துவின் மீதும், மேலான பரலோகத்தின் மேலும் வைக்கவேண்டும் (பிலி.3:19;கொலோ.3:2). வேத வசனத்தினால் மனதை நிரப்பவேண்டும் (சங்.1:1-3; சங்.119). ஒழுக்கமுள்ளவைகள், நீதியுள்ளவைகள், கற்புள்ளவையேகளையே சிந்தித்துக் கொண்டிருக்கவேண்டும் (பிலி.4:8). நம்முடைய கண்கள் இச்சையின் ஆயுதங்களாக இராதபடி ஜாக்கிரதையாக காத்துக் கொள்ளவேண்டும் (யோபு 31:1; 1 யோவான் 2: 16). தீங்கான எந்த ஒரு காரியத்தையும், புத்தகத்திலோ, தொலைக்காட்சியிலோ, நிஜ வாழ்க்கையிலோ என் கண்முன் வைக்கமாட்டேன் என்று சங்கீதக்காரனைப் போலத் தீர்மானம் எடுக்கவேண்டும் (சங்கீதம் 101:1; ஏசாயா 33:14,15; ரோமர் 13:14; ஆபகூக் 1:13).

சிந்தையையும் சரீரத்தையும் கெடுக்கும் எந்த ஒரு காரியத்திற்கும் விலகி ஓடுங்கள் (1கொரி.6:18; 10:14; 2 தீமோ.2:22). உங்கள் தனிப்பட்ட வாழ்வின் சிந்தை, வார்த்தைகள், செயல்கள் அனைத்தும் கிறிஸ்துவின் வருகையின்போது பரிசுத்தமும் பிழையற்றதுமாய் இருப்பதாக (எபே. 5:27; 1தெச.5:23)!

## 2. உறவுகளில் பரிசுத்தம் *(Inter-Personal Life)*

சகோதர சிநேகத்தைக் குறித்து நான் உங்களுக்கு எழுத வேண்டுவதில்லை. நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படிக்குத் தேவனால் போதிக்கப்பட்டவர்களாயிருக்கிறீர்களே. அந்தப்படி நீங்கள் மக்கெதோனியா நாடெங்குமுள்ள சகோதரரெல்லாருக்கும் செய்துவருகிறீர்கள். சகோதரரே அன்பிலே நீங்கள் இன்னும் அதிகமாய்ப் பெருகவும் வேண்டும் (1 தெசலோனிக்கேயர் 4:9,10).

தெசலோனிக்கே பட்டணத்து மக்கள் சுயநலவாதிகளாக, சிற்றின்பப்பிரியராக தங்களுடைய தொழில், வர்த்தகம் ஆகியவற்றிலேயே கவனம் செலுத்துகிறவர்களாக இருந்தார்கள். ஒருவரை ஒருவர் நேசிப்பது, அன்பு

செலுத்துவது அப்பட்டண மக்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. பரிசுத்தத்தில், ஜனங்களை ஆழமாக நேசிக்கக்கூடிய அன்பும் அடங்கியுள்ளது. அன்பில் அதிகமதிமாய்ப் பெருகவேண்டும் என்று பவுல் கூறுகிறார் (வச.10). நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்ளுவார்கள் என்று இயேசு கூறினார் (யோவான் 13:35). நம்முடைய உறவுகள் பரிசுத்தமும் பலமுள்ளதாகவும் இருக்க வேண்டுமானால் கீழ்க்கண்ட கிறிஸ்துவின் குணங்களை நாம் உடையவர்களாயிருக்க வேண்டும்.

**மனதுருக்கம்:** இது மற்றவர்களுடைய கஷ்டத்திலும் துயரத்திலும் நம்மை ஈடுபடுத்திக்கொண்டு உதவி செய்தலாகும் (மாற்கு 6:34).

**இரக்கம்:** இது நம்மிடம் இரக்கம் பாராட்டுபவர்களுக்கு மட்டுமல்லாமல் நாம் உன்னதமானவருக்குப் பிள்ளைகளாயிருக்கும்படி நன்றியறியாதவர்களுக்கும், துரோகிகளுக்கும் இயேசுவைப் போல நன்மை செய்வதாகும் (லூக்கா 6:35).

**தாழ்மை:** இது பெருமைக்கு எதிர்ப்பதமாகும். கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர் களாகிய நாம் அவரைப்போல சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்க வேண்டும் (மத். 11:29).

**பொறுமை:** தேவனைப்போல நாமும் ஜனங்களிடத்தில் நீடிய பொறுமையுள்ளவர் களாயிருக்க வேண்டும் (2பேதுரு 3:9; 1தெச.5:14) நாம் மற்றவர்களைச் சகித்துக்கொள்வதிலும், ஒருவரை ஒருவர் மன்னிப்பதிலும் நம்முடைய பொறுமை வெளிப்படும். நாம் யார்மீதும் பகை மற்றும் எரிச்சல் உள்ளவர்களாக இருக்கக்கூடாது. யாவரோடும் சமாதானமுள்ளவர்களாக ஒற்றுமையுள்ளவர்களாக வாழவேண்டும் (ரோமர் 12:16,18; எபி,12:14).

**அன்பு:** அன்பு எல்லா நற்குணங்களுக்கும் கிரீடமாயிருக்கிறது. பிறனிடத்தில் அன்புகூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே முழு வேதமும் அடங்கியிருக்கிறது (ரோமர் 13:9; மத். 22:37-40) என்று இயேசு கூறினார். நாம் கிறிஸ்துவைப் போல நிபந்தனையற்ற முறையில் அன்புகூரக் கற்றுக்கொள்ளும்போது மற்றனைத்து நற்குணங்களும் நம்முடைய உறவுகளில் வெளிப்பட ஆரம்பிக்கும்.

## 3.வேலை பார்க்கும் இடத்தில் பரிசுத்தம் (*Professional Life*)

புறம்பேயிருக்கிறவர்களைப் பற்றி யோக்கியமாய் நடந்து, ஒன்றிலும் உங்களுக்குக் குறைவில்லாதிருக்கும்படிக்கு, நாங்கள் உங்களுக்குக் கட்டளையிட்டபடியே, அமைதலுள்ளவர்களாயிருக்கும்படி நாடவும், உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும், உங்கள் சொந்தக்கைகளினாலே வேலை செய்ய வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறோம் (1 தெசலோனிக்கேயர் 4:11,12).

நாம் வேலைப் பார்க்கும் இடங்களிலும் நம்முடைய பரிசுத்தம் பிரதிபலிக்க வேண்டும். வேலை செய்யும் அநேகர் இன்று தங்கள் நேரத்தில் மூன்றில் ஒரு பகுதியை வீட்டிற்கு வெளியே செலவழிக்கிறார். சமுதாயத்திலும் வேலை ஸ்தலத்திலும் இன்று கிறிஸ்தவர்களாய் வாழ்வது ஒரு சவாலாகவே இருக்கிறது. இன்று கிறிஸ்தவர்கள் பலர் வேலைக்கு செல்லும்போது தங்கள் விசுவாசத்தை வீட்டிலேயே விட்டுச் செல்லுகிறார்கள். நம்முடைய விசுவாசத்தையும்

வேலையையும் பிரிக்க முடியாது. நாம் வாழும் இடத்திலும் வேலை செய்யும் இடத்திலும் தேவனுக்காக ஒரு தாக்கத்தையும் ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்தவே தேவன் நம்மை தெரிந்தெடுத்திருக்கிறார். ஊழலும் அநீதியும் நிறைந்த உலகத்தில் நாம் உண்மை, உத்தமம், நேர்மையை நிரூபித்துக் காட்டவேண்டும். தேவனை அறிந்த ஜனங்களின் நடத்தை வேறுபட்டதாகயிருக்க வேண்டும்.

வேலை ஸ்தலங்களில் கிறிஸ்தவர்கள் சிறுபான்மையினராகவே இருப்பதால் அநேக வேளைகளில் அவர்கள் மற்றவர்களுடைய அநீதியான பாவச் செயல்களுக்கு உடன்பட்டு விடுகிறார்கள். இது அவர்கள் விசுவாசத்திற்கும் வேதக் கோட்பாடுகளுக்கும் முரணாக இருக்கிறது. வேலை ஸ்தலங்களில் நாம் காணும் சில நெறியற்ற, அநீதியான செயல்களாவன: 1) பொய், 2) ஏமாற்றுதல், 3) திருடுதல், 4) ஊழல், 5) லஞ்சம் போன்றவை (லேவி. 19;11,13; நீதி.11:1;20:10,23;21:16). தேவ பிள்ளைகள் வேதத்தின் கொள்கைகளுக்குத் தங்களை அர்ப்பணித்து, பூமிக்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்கவேண்டும். கிறிஸ்துவின் நீதியையும் பரிசுத்தத்தையும் உலகம் நம்மில் காண விரும்புகிறது! ஜீவ வசனத்தைப் பிடித்துக் கொண்டு, உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருங்கள் என்றும் வேதம் கூறுகிறது (பிலி.2:14,15).

பரிசுத்தம் என்பது “இதைச் செய், இதைச் செய்யாதே” என்பதில் இல்லை. ஆனால் தேவ சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து கிறிஸ்துவின் குணாதிசயத்தை வெளிப்படுத்துவதில் இருக்கிறது. ஆகவே **உள்ளத்தில் பரிசுத்தம், உடலில் பரிசுத்தம், உறவுகளில் பரிசுத்தம், உத்தியோகம் பார்க்கும் இடத்தில் பரிசுத்தம்** என நாம் அனைத்திலும் பரிசுத்தமாக வாழ தீர்மானிப்போம்! கர்த்தர் உணர்த்தும் குறைகளை, பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்பு பெறுவோம்! எழுப்புதலை நிச்சயம் காண்போம்!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி

---

**தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு செய்திகள், கவிதைகள், துணுக்குகள், கடிதங்கள், சாட்சிகள் யாவற்றையும் அனுப்பித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்**

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY - 620 001
Cell : 94434 15484



# ஆதி சபையிலிருந்து கற்றுக்கொள்வோம்

**Rev. P.S. ராஜமணி**

இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

## 13. ஊழியத்தில் ஈடுபட்டு ஊழிய பயிற்சி கொடுத்தனர்

தொடர்ச்சி

**அன்று :** தேவனுடைய ஊழியத்தைச் செய்ய அழைக்கப்பட்டவர்கள், மூத்த ஊழியர்களுடன் ஊழியத்தில் ஈடுபட்டனர். ஊழியத்தைச் செய்து கொண்டே ஊழியத்தைப் பற்றிய காரியங்களை கற்றுக்கொண்டனர்.

### இயேசு கொடுத்த பயிற்சி

இயேசு தம்முடைய ஊழியத்தைச் செய்ய அழைத்தவர்களை தம்முடன் வைத்துக்கொண்டு அவர் போகும் இடங்களுக்கெல்லாம் கூட்டிச் சென்று அவருடைய போதனைகளை கேட்கச் செய்தார். அவர் செய்த அற்புதங்களைப் பார்க்கச் செய்தார். அவர்களுடன் தனித்திருந்து அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய காரியங்களைப் போதித்தார். அவர்கள் தங்களுக்கு விளங்காதவைகளைக் குறித்து கேள்வி கேட்டபோது விளக்கிக் கூறினார். இயேசு நடத்தின வேதாகமக் கல்லூரி நடமாடும் வேதாகமக் கல்லூரியாக இருந்தது எனக் கூறலாம்.

### பவுலின் உடன் ஊழியர்கள்

பவுல் அப்போஸ்தலனும் இயேசுவின் மாதிரியைப் பின்பற்றினார். தீமோத்தேயு, தீத்து போன்று உடன் ஊழியர்களை தம்முடன் வைத்துக்கொண்டு அவர் போன இடங்களுக்கெல்லாம் கூட்டிச்சென்று அனுபவ ரீதியான போதனைகள் மூலம் ஊழியப் பயிற்சி கொடுத்தார். பர்னபா, மாற்கு, லூக்கா, சீலா, ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் போன்றவர்கள் பயிற்சி கொடுத்தனர்.

**இன்று :** ஆதி சபையில் உடன் ஊழியங்களுக்குப் பயிற்சி கொடுத்தது போலவே இன்றும் அநேக போதகர்கள் பயிற்சி கொடுக்கிறார்கள். ஆனால் இன்று பெரும்பான்மையான ஊழியப் பயிற்சி வேதாகமக் கல்லூரிகள் மூலமே நடைபெறுகிறது.

### வேதாகமக் கல்லூரிகள்

வேதாகமக் கல்லூரிகளின் பயிற்சியை நான் மதிக்கின்றேன். நானும் பல ஆண்டுகள் வேதாகமக் கல்லூரியில் படித்தேன். பல ஆண்டுகள் வேதாகமக் கல்லூரியிலே போதிக்கும் ஊழியத்தைச் செய்தேன்.

### இந்த ஊழியத்திலுள்ள குறைபாடுகள் சிலவற்றை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்

வேதாகமக் கல்லூரிகள் நடைபெறும் முறையைப் பார்த்தால் பெரும்பான்மையானவை ஒரு வேலைக்கு பயிற்சி கொடுக்கும் உலகப் பிரகாரமான கல்லூரிகள் போல செயல்படுகின்றன.

### வேதாகமக் கல்லூரி விரிவுரையாளர்கள்

பரிசுத்த வேதத்தைப் போதிக்கும் இவர்களில் அநேகர் இயேசு கிறிஸ்து இலவசமாய்த் தரும் பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றிருப்பதிலேயே சந்தேகம் உண்டு. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறாதவர்களாயிருக்கின்றனர். முழு வேதாகமமும் தேவனுடைய வார்த்தை என்று நம்பாதவர்களாக அநேகர் இருக்கின்றனர்.

இவர்கள் எப்படி இந்த ஊழியத்திற்கு வந்தார்கள் என்பது கவனத்திற்குரியது. இவர்கள் உலகப்பிரகாரமாக நல்ல கல்வி கற்றவர்கள். வேதாகமம் எழுதப்பட்ட மூலமொழிகளான எபிரேய, கிரேக்க மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்கள். முழு வேதாகமமும் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் எழுதப்பட்டது என்பதை நம்பாத கல்லூரிகளில் படித்து பட்டம் பெற்றவர்கள். இந்த இறையியல் கல்லூரிகள் அரசாங்கத்தால் அங்கீகாரம் பெற்றவை. எனவே இதில் படித்து முடித்து பண்டிதர் பட்டத்துடன் தாங்கள் கற்றுக்கொண்டதை போதிக்க இன்னொரு இறையியற் கல்லூரிக்கு வேலைக்கு வருகின்றனர்.

இறையியல் கல்லூரிகளின் நூலகத்திற்கு சென்று பார்த்தால் இப்படிப்பட்டவர்கள் எழுதின புத்தகங்கள் ஏராளம். இப்படிப்பட்ட கல்லூரிகளில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் ஒரு வேலையில் அமர்வதுபோல சபை மேய்ப்பர்களாக பொறுப்பேற்கின்றனர். இவர்களுடைய போதனையில் சபை எப்படி இருக்கும்? உயிரற்று, செத்துப் போயிருக்கும்.

உலகப் பிரகாரமான கல்லூரிகளில் பேராசிரியர்களாக இருப்பவர்கள் நல்ல படிப்பும், போதிக்கும் திறமையுமுடையவர்களாக இருப்பார்கள். ஆனால் தனிப்பட்ட வாழ்க்கையில் ஒழுங்கீனமானவர்களாக, ஒழுக்கக் கேடானவர்களாக இருக்கலாம். அதைப் பற்றி யாரும் கவலைப்படமாட்டார்கள். இன்று போதகர்கள் அநேகர் இந்த நிலையில்தான் இருக்கின்றனர். போதகர்கள் மத்தியில் பண ஆசை, பதவி ஆசை, சண்டைகள் வழக்கு மன்றங்களில் நீதிக்காக விண்ணப்பித்தல் போன்றவை நடைபெறக் காரணம் இவர்கள் அடிப்படையிலேயே நல்ல கிறிஸ்தவர்களாக உருவாகவில்லை என்பதே உண்மை.

வேதாகமக் கல்லூரிகளுக்கும் சாதாரணக் கல்லூரிகளுக்கும் அதிக வித்தியாசமில்லை. இப்படிப்பட்ட கல்லூரிகளில் படித்தவர்களால் தேசத்தில் எழுப்புதலைக் காண முடியுமா?

நான் இங்கிலாந்து தேசத்திற்கு சென்றிருந்தபோது அங்குள்ள பேராயர் தன்னை ஆண் புணர்ச்சிக்காரர் என்று கூச்சமில்லாமல் பேசியிருக்கிறார். சபைகளில் ஆணுக்கு ஆண், பெண்ணுக்குப் பெண் திருமணம் செய்ய அனுமதித்துள்ளனர். பிற மதத்தினர் இதைவிட எத்தனையோ மேன்மையான ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கிறார்கள்.

தேவனை நம்பாத கம்யூனிசக் கொள்கையுடையவர்கள் அநேகர் இறையியல் கல்லூரிகளில் பேராசிரியர்களாக இருக்கின்றனர்.

## இயேசு கிறிஸ்து எப்படிப்பட்டவர்களை ஊழியத்திற்கு அழைத்தார்?

ஒழுக்கமுள்ளவர்களை, உண்மையுள்ளவர்களை, தங்களை முற்றிலும் அர்ப்பணித்தவர்களை அழைத்தார். அவர்கள் அதிக கல்வியுடையவர்களாக இல்லை. ஆனால் இயேசுவுக்காக உயிரைக் கொடுத்து இரத்தச் சாட்சிகளாக மரித்தார்கள். இவர்கள் போதித்தபோது பல்லாயிரம் பேர் இயேசுவை ஏற்றுக்கொண்டனர். அற்புத அடையாளங்கள் நடைபெற்றன. ஊர்கள்தோறும் சபைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இவர்களில் எவர் எபிரேய மொழியையும், கிரேக்க மொழியையும் பற்றி கவலைப்பட்டார்கள்? இவர்களுக்கு பிரசங்கிக்க யாரும் கற்றுக் கொடுக்கவில்லை. ஆனால் அனுதினமும் மணிக்கணக்கில் தேவ சமுகத்தில் நின்று ஜெபிக்க பயிற்சி பெற்றிருந்தனர். கிராமத்திலே பிசாசு பிடித்தவர்களை விடுதலையாக்க எது தேவை? தேவ வல்லமை. எந்த இறையியல் பட்டமும் பிசாசைத் துரத்தாது. எபிரேய மொழியாலும், கிரேக்க மொழியாலும் அசுத்த ஆவியைத் துரத்த முடியாது.

இன்று ஆவிக்குரிய ஸ்தாபனங்கள் நடத்தும் வேதாகமக் கல்லூரிகளும் தரம் குறைந்து காணப்படுகின்றன. அதில் போதிக்கும் ஆசிரியர்கள் எப்படிப்பட்டவர்களோ அப்படியே மாணவர்களும் இருப்பார்கள்.

பழைய பரிசுத்த நிலைக்கு திரும்ப கர்த்தர் உதவி செய்வாராக.

- தொடரும்



# நீங்களும் பைபிளை வாசிக்கலாம்

## You too can read the Bible

**Rev. Dr. L. ஜெயபாலன்**

மண்டல தலைமைப் போதகர், திண்டுக்கல் மண்டலம்

**இன்று நீங்கள் பைபிளை வாசித்தீர்களா?**

வாலிபன் ஒருவன் காட்டிற்குள் பிரயாணம் பண்ணுகையில் வழிதப்பி போய் “எனக்கு வழியை காண்பித்தால்” ஒரு மெழுகுவர்த்தி ஆலயத்தில் எரிய வைப்பேன் என்றானாம். பின்னர் காட்டில் செல்கையில், பயங்கர இடி மின்னல், ஆபத்தான சூழ்நிலையில், இந்த ஆபத்தில் இருந்து நான் காப்பாற்றப்பட்டால் குருவாக பணிபுரிவேன் என பொருத்தனை பண்ணினானாம். அந்த வாலிபன் தான் மார்ட்டின் லூத்தர்.

தனது இளவயதில், துறவறத்திற்கு அர்பணித்து, சர்வகலாசாலையில் BA, MA., பட்டத்தை 1502-ல் பெற்றார். 1509-ல் B.D பட்டம் பெற்று பின்னர் 1512-ல் Doctor of Theology இறையியலில் பண்டிதர் பட்டம் பெற்றார். இளவயதில் தனது பாட்டிக்காக, படிக்கட்டுகளில் ஏறி முழுங்காலில் நின்று ஜெபிப்பாராம். “என் ஜெபத்தினால் உத்தரிக்கும் ஸ்தலத்தில் இருக்கும் பாட்டி பரலோகம் போவாரா என்பது எப்படித் தெரியும்” என யோசிப்பாராம்.

அவருக்குள்ளே ஆன்மீகத்தாகம் அதிகமாகக் காணப்பட்டது. ஒருநாள் நூலகத்தில் இருந்த ஒரு பைபிளைக் கண்டு அதை ஆர்வத்துடன் வாசிக்கையில் “விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்” என்ற வசனம் (ரோமர் 3:28). அவருக்குள் ஒரு புதிய தாக்கத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியது. அவருடைய இதயத்தில் ஒரு புதிய நம்பிக்கை உருவாயிற்று. வேதகல்லூரியில் படிக்கையில், சங்கீதப் புத்தகம், ரோமருக்கு, கலாத்தியருக்கு எழுதின நிருபங்கள் இவருக்குள் வேதாகமத்தை குறித்த பெரிய ஆவலை உருவாக்கியது. கடவுள், மார்ட்டின் லூத்தரை உபயோகித்து, சீர்திருத்த இயக்கத்தை உருவாக்கினார். இதினிமித்தம் கிறிஸ்தவ சமயம் :

1. "SCRIPTURAL RELIGION" - பைபிளை அடிப்படையாகக் கொண்ட
2. "SPIRITUAL RELIGION" - ஆவிக்குரிய வாழ்வை அடிப்படையாகக் கொண்ட
3. "PERSONAL RELIGION" - ஒவ்வொருவருக்கும் உரியதாக...
4. "NATIONAL RELIGION" - தேசத்திற்குரியதாக...
5. "UNIVERSAL RELIGION" - அகில உலகத்திற்குரியதாக மாறியது.

ஆம் வேதாகமம், கிறிஸ்தவ தலைவர்கள் வாசித்து, வியாக்கியானம் செய்யக்கூடும் என்ற பாணியில் இருந்த காலம் மாறி, தனிப்பட்ட ஒவ்வொருவரும் வேதாகமத்தை வாங்கிப் படித்து பயனடையலாம் என்ற நிலை வந்தது. WORD ALONE வார்த்தை மட்டும் FAITH ALONE விசுவாசம் மட்டும் GRACE ALONE கிருபை மட்டும் என்பதை மார்ட்டின் லூத்தர் நம்பினார். அவர் எழுதிய ஆங்கிலப் பாடலில் "A Mighty Fortress is Our God" கடவுளுடைய வார்த்தை நமது பொக்கிஷம் (பரம்பரை சொத்து). அது நித்திய காலமாக நமக்குரியது, அதனுடைய வெளிச்சத்தை, ஒவ்வொரு காலத்திலும் வெளிப்படுத்துவது, நமது தலையாயக் கடமை.

பைபிளைக் குறித்து, அது ஒரு நெருப்பு, பொன், சுத்தியல், தேன், ஜீவன், வெளிச்சம், பலமான ஆகாரம், பால், கண்ணாடி என்றெல்லாம் கூறப்பட்டுள்ளது.

## Seed - விதை

''அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே" (1 பேதுரு 1:23). ஒவ்வொரு விதையும் தனித்தன்மை வாய்ந்தது. ஒரு விதையை நட்டால் 3-4 மாதங்களில், தானியத்தையோ, காய்கறிகளையோ தரும். 3 வருடங்களில் கனிதரும் விதைகள் உள்ளன. 30 வருடங்களில் பலனைத்தரும் மரங்களும் உள்ளன. மேற்கூறிய விதைகள் குறிப்பிட்ட காலத்தில் நடாவிடில், அவைகள் பயனற்றதாகிவிடும். ஆனால் கர்த்தருடைய வார்த்தையோ.

- **அழிவில்லாதது :** அது ஜீவனை உடையது. "நான் பேசும் வார்த்தைகள், ஜீவனாயும், ஆவியாயும உள்ளன" என்றார் இயேசு.

- **ஆக்கப்பூர்வமானது :** ஒருவரை மாற்றக்கூடியது. கடவுளுடைய வார்த்தை ஒருவரில் காலா காலமாய் கிரியை செய்யும். அது ஒரு உயிலைக்காட்டிலும் விலையேறப்பட்டது. 1981-ல் இங்கிலாந்து தேசத்தில் ஒரு ஆங்கில சபையில் பிரசங்கித்தேன். அந்தக்கூட்டத்தில் ஒப்புக்கொடுத்தவர்களில் வாலிபன் ஒருவன், அவன் எனது அறைக்கு வந்து எத்தனையோ கூட்டங்களில் என்னை கடவுள் உணர்த்தினார். ஆனால் நான் இயேசுவுக்கு என்னை ஒப்புக்கொடுக்கவில்லை. இன்று என்னால் தப்பி ஓடமுடியவில்லை, நான் உங்களிடம் வந்தேன் என்றான். கொஞ்சம் ஆலோசனைக் கொடுத்து ஜெபித்து அனுப்பினேன். பின்னர் மறுபடியும் வந்து நீங்கள் ஒரு வசனத்தை சொன்னீர்கள். அதன் இருப்பிடத்தைக் காட்டுங்கள் என்றான். உடனே யோவான்1:12-ஐ திறந்து வாசித்துக் காட்டினேன். அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய், அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அதிகாரங்கொடுத்தார்.

- **ஆண்டவருக்கு விரோதமாக பாவம் செய்யாமல் தடுக்கின்றது.** "உமக்கு விரோதமாக பாவம் செய்யாமல் இருக்க உமது வாக்கை (வசனத்தை) என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்" (சங்கீதம் 119:11).

## Sword - பட்டயம்

"தேவனுடைய வார்த்தையானது ஜீவனும், வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்த பட்டயத்திலும் கருக்கானதாயும் ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும், ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" எபிரெயர்4:12. இந்தப் பட்டயம், பிறர் உதவியின்றி தானாகவே அதை வைத்திருக்கிறவர்களை உணர்த்தும், திருத்தும் அல்லது தண்டிக்கும். பிறரையும் இந்தப்பட்டயம் அவ்வாறே செய்யும். நான் ஊழியத்தை 1964 முதல் இன்று வரை செய்து வருகின்றேன். எனது தாய் கத்தோலிக்க சபையில் இருந்து வந்தவர்கள். எனது அப்பா C.S.I. எங்கள் வீட்டிற்கு போதகர் மாதந்தோறும் வருவார். பாகப்பிரிவினையால் எல்லாம் இழந்து மிகவும் கஷ்டங்களை உறவினர்கள் மத்தியில் அனுபவித்த காலம். போதகர் வந்தவுடன் "இயேசு வந்ததுபோல் இருந்தது" என எனது தாய் கூறுவார்கள், விசேஷித்த பிரசங்கியாரை வீட்டில் அழைத்து, தேங்காய் சாதம் உருண்டைக் கறி குழம்பு வைத்து உபசரித்து அனுப்புவார்கள்.

எங்கள் சபையில் சுமார் 1000 பேர்கள் இருந்தனர். பாடகர் குழுவில் 40 பேர்கள் இருந்தோம். போதகர் ஊழியம் மேன்மையானது, சுலபமானது என எண்ணினேன். கல்லூரியில் சாதாரண மொழிபெயர்பாளராக சேர்ந்து பின்னர் படிப்படியாக பதிவாளர், பொருளாளர், பின்னர் முதல்வர் பதவியை அடைய கர்த்தர் உதவினார். பரிசுத்தாவியைப் பெற்ற, ஆவிக்குரிய மக்கள் மத்தியிலும், பொறாமை, பெருமை, பிரிவினை போன்றவைகள் காணப்பட்டன. இச்சூழ்நிலையில் பயங்கரமான பிரச்சனைகளை, ஒருசிலர் உருவாக்க முயற்சித்தனர். அப்படிப்பட்ட சூழ்நிலையில், ஒரு தேவனுடைய பிள்ளை (27 வயது) என்னிடத்தில் தொடர்புகொண்டு "உங்களைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. உங்கள் தலையில் ஒரு கிரீடத்தையும், கையில் ஒரு பட்டயத்தையும் தேவன் கொடுத்துள்ளார்கள்" என்றார்கள்.

எனது மனைவியும் "நீங்கள் எவ்வளவோ போராட்டங்களை தாண்டி வந்துள்ளீர்கள். கிரீடம் பதவியையும், பட்டயம் ஆவியின் பட்டயமாகிய வேதத்தையும் காட்டுகிறது. எனவே தைரியத்தோடு செய்யுங்கள் என்றாள். என் வாழ்க்கையில் ஜெபம், வேதவசனம், ஆத்தும ஆதாயம் எல்லாவற்றிற்குமேல் தேவனுடைய கிருபை இம்மட்டுமாய் நடத்தி வந்துள்ளது.

**Water - தண்ணீர்**

"இந்த தண்ணீரை குடிப்பவனுக்கு மறுபடியும் தாகம் உண்டாகும், ஆனால் நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ, ஒருக்காலும் தாகமுண்டாகாது" என இயேசு கூறினார். யோவான் 4:13-14 தண்ணீர் உடலுக்கு மிகவும் அவசியமானதொன்று, பிறப்பிலிருந்து இறப்பு வரை நீர் தேவை. மறுபிறப்பிலிருந்து பரலோகம் செல்லும்வரை கர்த்தருடைய வார்த்தை தேவை.

அமெரிக்காவில் பிறந்த அடோனிராம் ஜட்சன், பர்மாவிற்கு ஊழியம் செய்ய சென்றார். பர்மிய மொழியை நன்றாக கற்று, ஒரு அகராதியை உருவாக்கி, வேதாகமத்தை மொழிபெயர்த்தார். யுத்தத்தின் நிமித்தம், சந்தேகத்தின் பேரில் சிறையில் அடைக்கப்பட்டு, வேதத்தின் நகல்களை தலையணையில் வைத்து, அந்த தலையணை வெளியே எறியப்பட்டது. அதை ஒரு கிறிஸ்தவர் எடுத்து, பின்னர் அதில் இருந்த பகுதிகள்தான் பர்மிய மொழியில் வேதாகமமாக அச்சடிக்கப்பட்டது. "என் வாயிலிருந்து புறப்படும் வசனம்... அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்" ஏசாயா 55:11. எல்லா கனமும், புகழும் தேவனுக்கே!

பரிசுத்தாவியின் அபிஷேகம், குடும்ப ஆலோசனைகளுக்கு 94434 74921 என்ற எண்ணிற்குத் தொடர்பு கொள்ளவும்.





# யாத்திராகமம் (Exodus)

## புத்தக அறிமுகம்

**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**
All India National Director, Global University

ஆதியாகமத்தின் தொடர்ச்சியே யாத்திராகமம். யோசேப்பு எகிப்திலேயே மரித்தான். இஸ்ரவேல் ஜனங்களை தேவன் நிச்சயமாய் சந்திப்பார் என்றும், வாக்குத்தத்த தேசமாகிய கானானுக்கு அவர்களைப் போகப்பண்ணுவார் என்றும், தான் மரிக்குமுன்பு அவர்களுக்குச் சொன்னான். தனது மரணத்துக்குப்பின் தனது எலும்புகளைப் பத்திரப்படுத்தவும், தேவன் அவர்களைச் சந்தித்து புறப்படப்பண்ணும்போது அவற்றை வாக்குத்தத்த தேசத்துக்கு எடுத்துச்சென்று அடக்கம் பண்ணவேண்டுமென்றும் கட்டளையிட்டான்; அப்படியே யோசேப்பின் எலும்புகள் ஒரு பெட்டியில் பத்திரப்படுத்தப்பட்டன (ஆதி.50:24-26).

யாத்திராகமத்தின் ஆரம்பத்தில், யோசேப்பை அறியாத புதிய ராஜன் ஒருவன் எகிப்தில் தோன்றினான் (1:8), அவன் இஸ்ரவேல் ஜனங்களை ஒடுக்கி உபத்திரவப் படுத்தினான் என்றும் பார்க்கிறோம் (2:23-25).

தொடர்ந்துள்ள 40 அதிகாரங்களில் நான்கு முக்கிய விபரங்கள் சரித்திரமாக எழுதி வைக்கப்பட்டுள்ளன:

- இஸ்ரவேலர் எகிப்திலிருந்து விடுவிக்கப்படுதல்.
- இஸ்ரவேலுக்கு தேவன் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தல்.
- ஆசரிப்புக்கூடாரம் ஸ்தாபிக்கப்படுதல்.
- ஆசரிப்புக்கூடாரத்தில் தேவன் தமது மகிமையுடன் வந்து தங்கியிருத்தல்.

இந்தச் சம்பவங்களை மூன்றுப் பிரிவுகளாக நமக்குத் தருகிறது யாத்திராகமம்.

**1. எகிப்திலிருந்து விடுதலை:** 1-14 அதிகாரங்கள்

எகிப்தில் அடிமைகளாய் அவதியுறும் இஸ்ரவேலரைப் பார்க்கிறோம். அவர்களுடைய சுமைகளை நீக்கி, விடுதலையாக்கி, அடிமைத்தனத்துக்கு நீங்கலாக்கி, ஓங்கிய கையினாலும் மகா தண்டனைகளினாலும் அவர்களை மீட்டு இரட்சிக்க தேவன் இறங்கிவந்தார்(6:6,7). மோசேயின் பிறப்பு, (ஆதி.2). எரிகிற முட்செடியின் நடுவில் நின்று தேவன் அவனுக்குக் கொடுத்த தரிசனமும் அழைப்பும், (ஆதி.3-4). எகிப்தியர்மேல் தேவன் அனுப்பிய பத்து வாதைகள், (ஆதி.7-12). பஸ்கா, (ஆதி.12). செங்கடலைக் கடத்தல், (ஆதி.13-14) ஆகிய சம்பவங்களை இப்பகுதிகள் விவரிக்கின்றன.

**2. வனாந்திர வழிப்பயணம்:** 16-18 அதிகாரங்கள்

சீனாய்மலை வழியாக இஸ்ரவேலரின் வனாந்திரப்பயணத்தை இப்பகுதிச் சித்தரிக்கிறது. கர்த்தர் அனுமதித்த காலங்களில் இரவும் பகலும் இஸ்ரவேலர் பயணம் மேற்கொண்டனர்.. இரவில் பயணிக்க நெருப்புத் தூணாகவும், பகலில் பயணிக்க மேகத்தின் தூணாகவும் சென்று அவர்களை வழிநடத்தினார். **மன்னா** என்ற தேனிட்டப் பணியாரம் போன்ற அனுதின உணவு, கொழுப்பே ஏறாத **காடை** என்னும் இறைச்சி, நிழலுக்குப் **பாலைவனச்சோலைகள்,** தாகம்தீர்க்க மதுரமான தண்ணீர் பாலைவன இறைச்சி என்றழைக்கப்படும் **பேரீட்சைப்பழங்கள்** ஆகிய அனைத்தையும் தந்து இஸ்ரவேல் ஜனங்களை தேவன் வழிநடத்தினார். ஒரு தேசமாக உருவாகத் தேவையான விசுவாசத்தையும், கீழ்படிதலையும்

வனாந்திரப்பயணத்தில் தேவன் அவர்களுக்குக் கற்றுத்தந்தார்.

**3. சீனாய் மலையில் தேவ வெளிப்பாடுகளைப் பெறுதல்:** 19-40 அதிகாரங்கள்

- தேவன் மக்களோடு செய்த உடன்படிக்கை, (அதி.19).
- பத்துக் கற்பனைகள், (அதி.20).
- ஆசரிப்புக்கூடாரமும், ஆசாரியத்துவ ஊழியமும், (அதி.25-31).
- ஆசரிப்புக்கூடார வேலையின் நிறைவு, தேவ மகிமை இறங்கி வந்து நிரப்புதல், (அதி.40).

## I.இஸ்ரவேலரின் அடிமைத்தனமும் விடுதலையும் :

நான்கு நூற்றாண்டுகள் இஸ்ரவேலர் எகிப்திலிருந்தனர். இருபது வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் மட்டும் ஆறுலட்சம்பேர் இருந்தனர். பெண்களும் குழந்தைகளும் சேர்த்து இருபது இலட்சத்துக்கும் அதிகமானோராய்ப் பலுகிப் பெருகியிருந்தனர். யோசேப்பை அறியாத பார்வோன், (1:8) தோன்றுமட்டும் யோசேப்பின் காலத்தில் கிடைத்த நன்மைகளும் மனித தயவும் இஸ்ரவேலருக்குக் கிடைத்தது. ஆனால் இந்தப் புதிய பார்வோன் தோன்றியபோதோ இஸ்ரவேலரை ஒடுக்கத் தொடங்கினான். அவர்கள்பட்ட அடிமைத்தனத்தை கீழ்கண்ட குறிப்புகளில் காணலாம்.

- வேலைசெய்த பெரியோரிடத்தில் கொடுமையாய் வேலை வாங்கினர் (1:13). செங்கல் அறுக்கும்வேலை, வயலில் செய்கிறவேலை ஆகியவற்றால் இவர்களது ஜீவனையும் கசப்பாக்கினர்.
  - ➤ பார்வோனுக்காக பித்தோம், ராம்சேஸ் என்னும் பண்டசாலைப் பட்டணங்களைக் கட்டினர்.
  - ➤ கொடுமையாய் வேலைவாங்கப்பட்டனர்.
  - ➤ ஆளோட்டிகளால் அடிக்கப்பட்டனர்.
- புதிதாய்ப் பிறக்கும் ஆண்பிள்ளைகள் சிப்பிராள், பூவாள் முதலான மருத்துவச்சிகளால் கொல்லப்பட உபாயம் செய்யப்பட்டது, (1:15-22). அதையும் தேவன் முறியடித்தார்.
- அடுத்தக்கட்டமாக இஸ்ரவேலருக்குப் பிறக்கும் ஆண்பிள்ளையெல்லாம் கண்டெடுத்து, பரிசுத்த நதி எனப் போற்றப்பட்ட நைல் நதியில் எறிந்துவிட கட்டளையிடப்பட்டது, (1:22).

### இரட்சகனாகப் பிறந்த மோசே:

- பிறப்பும் வளர்ப்பும்:-

நெருக்கடியான காலத்தில் பிறந்த மோசே, அரசாங்க ஆணைகளுக்கு எதிராக ஒழித்துவைத்துப் பாதுகாக்கப்பட்டான். பாதுகாக்கப்படுவது கடினமெனக் கண்டபோது பெட்டியில்வைத்து நதியில் விடப்பட்டான். பார்வோனின் மகளுடைய வளர்ப்புமகனாக உரிமைபெற்று வளர்ந்து வந்தான். எகிப்தியருடைய சகல உயர்கல்வியிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான், (அப்.7:21,22). பொறியியற்கல்வி, கணிதம், வானியல் ஆகிய கல்வித்துறைகள் இதில் உள்ளடங்கும். நாற்பது ஆண்டுகாலங்கள் இந்த அரண்மனை வாழ்வும், ஆயத்தங்களும் கிடைத்தன.

- அழைப்பு:-

பார்வோனுக்குப் பயந்து மீதியான் தேசத்துக்கு ஓடிச்சென்ற மோசே அங்கு நாற்பது ஆண்டுகள் ஆடு மேய்க்கிறான். திருமணமாகி பிள்ளையும் பிறக்கிறது (யாத்.7:7; அப்.7:23). எரிகிற முட்செடியினின்று கர்த்தர் அவனுக்குத் தரிசனம் தந்து, பார்வோனிடம் திரும்பச்சென்று ஜனங்களை விடுதலைசெய்ய அழைத்தார்.

**பத்து வாதைகள்:**

பார்வோன் மோசேக்கு செவிகொடுக்கவில்லை. எனவே தேவன் பத்து வாதைகளை எகிப்தின்மேல் அனுப்பினார்.

- தண்ணீர் இரத்தமாகுதல், தவளைகள், பேன்கள் என்ற முதல் மூன்று வாதைகள் துன்பகரமான நெருக்கடி தந்தவை.
- பலவிதமான வண்டுகள், மிருகஜீவன்கள் அழியும்படி வந்த கொள்ளைநோய், எரிபந்தமான கொப்புளங்கள் ஆகிய மூன்று வாதைகளும் வலி ஏற்படுத்தி நெருக்கடி தந்தவை.
- கொடிய கல்மழை, வெட்டுக்கிளிகள், தடவிக்கொண்டிருக்கத்தக்கதான இருள், தலையீற்றின் (தலைப்பிள்ளை) சங்காரம் ஆகிய நான்கு வாதைகளும் ஆபத்தையும் அழிவையும் ஏற்படுத்தியவை.

**பஸ்கா:**

பார்வோனையும் அவன் ஜனங்களையும் தண்டிக்க தலைப்பிள்ளைச் சங்காரம் என்ற பத்தாவது வாதையை தேவன் அனுப்பினார். அழிக்கும் சங்காரத்தூதன் ஒருவன் தேவனால் அனுப்பப்படுவான். அவன் எகிப்திலெங்கும் உருவக்கடந்துபோய் மனிதரிலும், மிருக ஜீவன்களிலும் தலைப்பிள்ளைகள் அனைத்தையும் அழிப்பான், (12:12).

எகிப்தியர் நடுவில் வாழ்ந்துவந்த எபிரெயரின் தலைச்சன்கள் அழியாமல் காக்கப்படுவதற்கு தேவனே வழியொன்றைச் சொல்லித் தந்தார். ஒவ்வொரு குடும்பமும் ஒருவயதான பழுதற்ற ஆட்டுக்குட்டி ஒன்றை அடித்து, அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, தாங்கள் அதைப் புசிக்கும் வீட்டுவாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும், நிலையின் மேற்சட்டத்திலும் பூசி, அன்று இராத்திரியிலே அதின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு புளிப்பில்லா அப்பத்தோடும், கசப்பான கீரையோடும் அதைப் புசிக்கவேண்டும். சங்காரத்தூதன், அழித்துக்கொண்டே வரும்போது, இரத்தம் பூசப்பட்ட கதவின்நிலையைப் பார்த்து, **கடந்துபோவான்.** அதினிமித்தம் அந்த வீட்டிலுள்ள அனைவரும் பாதுகாக்கப்படுவர். இப்படி **கடந்துபோகுதல்** "Passover" என்பதே 'பஸ்கா' என அழைக்கப்பட்டது.

கீழ்படிதலையும், இரத்தத்தின்மூலம் மீட்புக்கிடைக்கும் என்பதையும் பஸ்கா மூலம் தேவன் எபிரெயருக்குக் கற்றுக்கொடுத்தார். இதன்மூலம் உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவஆட்டுக்குட்டியாகிய மேசியாவின் வருகைக்கு தமது ஜனங்களை தேவன் ஆயத்தம் செய்தார். கடந்த 2000 வருடங்களாக நாம் பங்குபெறும் கர்த்தருடைய பந்திக்கு இந்த பஸ்கா முன்னடையாளமாயிருக்கிறது.

பஸ்கா என்ற நிகழ்வு நமதாண்டவரின் இரட்சிக்கும் கிருபையை காட்டுகிறது. கொஞ்சமும் தகுதியற்ற இஸ்ரவேல் மக்கள்மேல் தேவன்கொண்ட மட்டற்ற கிருபையையே அது காட்டுகிறது. அப்படியே இயேசுவின் இரத்தத்தின் புண்ணியத்தால் நாம்பெறும் இரட்சிப்பும் தேவனுடைய மாபெரும் கிருபையே (எபேசியர்2:8-10; தீத்து.3:4-5).

## II. வனாந்திரப் பயணம்:

யாத்திராகமம் 16 முதல் 18 வரையுள்ள பகுதி நமக்குத்தரும் இஸ்ரவேலரது பயணமும் அவர்களது செயல்களும் பல சத்தியங்களை நமது விசுவாசப் பயணத்தை தொடர்ந்து நடத்திச்செல்ல நமக்குக் கற்றுத் தருகின்றன.

- வாழ்க்கையில் சோதனைகள் வருவது இயற்கையே, (ஆதி.15,16).

➤ தாகத்துக்கு என்ன செய்வோம்?

➤ புசிப்பதற்கு எங்கிருந்து கிடைக்கும்?

என்று கவலைப்படாமல் அனைத்து ஜீவராசிகளையும் போஷித்துக் காப்பாற்றும் சிருஷ்டி கர்த்தரை சார்ந்திருப்போம். மீன்கள், வெள்ளரிக்காய்கள், தர்பூசணிக்காய்கள், கீரைகள், வெங்காயங்கள், வெள்ளைப் பூண்டுகள் போன்றவற்றையே சாப்பிட்ட அவர்களுக்கு, (எண்.11:5) மன்னாவும், காடையும் மேலானவையல்லவோ!

- எனவே, கர்த்தர் என் தேவைகளை சந்திப்பார் என்று அவரை நம்பி சார்ந்திருப்போமாக. அவருடைய வாக்குத்தத்தங்களும், உண்மையும் மாறாதவை.
- கர்த்தர் நமது நடைகளை ஸ்திரப்படுத்துகிறவர், (ஆதி.17). கசந்த மாராவையும் மதுரமாக்குவார். அவரே நமது ஜெயக்கொடியாயிருந்து, சத்துருக்கள்மேல் வெற்றி தருவார்.
- அவ்வப்போது சரியான ஆலோசனைதர நம்பகமான எத்திரோ-க்களை அனுப்புவார் (ஆதி.18).

## III. சீனாய் மலையில் தேவ வெளிப்பாடுகள்:

இஸ்ரவேலர் கைக்கொள்ளும்படி தேவன் கொடுத்தப் பிரமாணங்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

- ஒழுக்க விதிகள் (Moral law) : இவை பரிசுத்த வாழ்விற்கென தேவன் எழுதிக்கொடுத்த சட்டங்கள் (20:1-17).
- குடிமையியல் சட்டம் அல்லது உள்நாட்டு விதிகள் (Civil law). இவை இஸ்ரவேலரது சட்டதிட்டங்கள், சமூகம் சார்ந்த விதிகள் (21:1-23:33).
- சடங்குகள் குறித்த சட்டங்கள் (Ceremonial law), (24:12-31:18).

இவை, இஸ்ரவேலரது ஆராதனை முறைமைகள், பலிகள், சடங்குகள் பற்றிய விதிமுறைகளை உள்ளடக்கியவை, (24:12-31:18).

இவற்றில், பத்துகற்பனைகள் என்பவை தேவன்தந்த ஒழுக்கவிதிகளின் சுருக்கம் ஆகும். தேவனுக்கும் மனிதருக்கும் ஆற்றவேண்டிய கடமைகள்பற்றிய விபரங்களை இவை நமக்குத் தருகின்றன. புதிய ஏற்பாட்டு விசுவாசிகளும் இவற்றைக் கைக்கொள்ளுவது அவசியமே! புதிய ஏற்பாட்டில் நாம் பார்க்கிறபடி, இந்தப் பத்து கற்பனைகளும் இரண்டே சொற்றொடர்களில் தரப்பட்டுள்ளன!

**“தேவனிடத்தில் அன்பாயிரு.**

**ஒருவரிடத்திலொருவர் அன்பாயிருங்கள்”**

இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட குடிமையியல் விதிகளும் (Civil law), சடங்குகள் சார்ந்த விதிகளும் (Ceremonial law) கிறிஸ்துவில் நிறைவேறுதலடைந்துவிட்டபடியால் (எபி.10:1), நாம் அவற்றை நுணுக்கமாய் கைக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை; எனினும் ஞானமும், ஆவிக்குரிய உன்னதக் கோட்பாடுகளும்கொண்ட இவைகள், எல்லாத் தலைமுறைகளுக்கும் பயனுள்ளவைகளே!

**ஆசரிப்புக் கூடாரம்:** (ஆதி.25,26,27)

ஆசாரிப்புக் கூடாரம்பற்றிய விபரங்கள் 25 முதல் 40 அதிகாரங்களில் தரப்பட்டுள்ளது, (32-34 அதிகாரங்கள் நீங்கலாக).

இஸ்ரவேலர் பயணம்செய்த காலங்கள் முழுவதும் அவர்கள் சுமந்துசென்ற பரிசுத்த ஸ்தலத்துக்கு ஆசரிப்புக்கூடாரம் எனப் பெயரிடப்பட்டது (Mobile Sanctuary). இது கிறிஸ்துவுக்கு முன்னடையாளமானது; கிறிஸ்துவுக்கு நேராய் நம்மை நடத்தக்கூடியது.

➤ அது தேவன் தமது ஜனங்கள் நடுவிலே வாசம்பண்ண ஏற்படுத்தப்பட்ட பரிசுத்த ஸ்தலமாகும், (25:8).

தேவனுடைய மகிமைப் பிரசன்னம் இரவும்பகலும் இடைவிடாமல் ஆசரிப்புக் கூடாரத்தின்மேல் தங்கியிருந்தது. இந்த மகிமையின்மேகம் புறப்படும்போது இஸ்ரவேலர் பிரயாணம்பண்ண ஆரம்பிப்பார்கள். அது எங்கு நிலைகொள்ளுகிறதோ, அங்கு பாளயமிறங்குவார்கள்.

➤ அது **சாட்சியின் கூடாரம்** என்றும் அழைக்கப்பட்டது, (38:21). பத்து கற்பனைகள் பொறித்திருந்த கற்பலகைகள் **சாட்சிப்பலகைகள்** என அழைக்கப்பட்டன. அவையிரண்டும் அதனுள் இருந்ததால் சாட்சியின் கூடாரம் என்று அழைக்கப்பட்டது.

➤ ஆசரிப்புக் கூடாரத்தில் பலிசெலுத்தப்பட்டது. அந்த இரத்தத்தின் மூலம் தேவன் பாவமன்னிப்பைத் தருகிறார் (29:10-14).

பாவமன்னிப்பிற்கென செலுத்தப்படும் இறுதியான பலி மனுக்குல மீட்புக்காக கிறிஸ்து கல்வாரியில் செலுத்தின பரிகாரப் பலியே ஆகும் (எபி.8:1-2; 9:11-14). ஆசரிப்புக்கூடாரம் அந்தக் கல்வாரியைச் சுட்டிக்காட்டுகிறது.

➤ ஆசரிப்புக்கூடாரம் பரலோகத்தையும் நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. அங்குள்ள பரலோக ஆசரிப்புக்கூடாரத்தில் கிறிஸ்து நமக்காக பரிந்துபேசும் பிரதான ஆசாரியராக நித்தியமாய் வாழ்ந்து நமக்காக விண்ணப்பம் பண்ணிக்கொண்டிருக்கிறார் (எபி.9:11-12, 24-28).

இந்த ஆசரிப்புக்கூடாரம் தேவனுடைய கடைசிகால மீட்பின் கிரியைகளையும் சுட்டிக்காட்டுகிறது. புதிய வானமும் புதிய பூமியும் தோன்றும். அப்பொழுது மனுஷரின் மத்தியில் தேவன் அமைக்கும் வாசஸ்தலத்தில் (ஆசரிப்புக்கூடாரத்தில்) அவர்கள் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். தேவன் அவர்களுடன் என்றென்றும் வாசம்செய்து அவர்களுடைய தேவனாயிருப்பார் (வெளி.2:3).

ஆக, எகிப்திலிருந்து இஸ்ரவேலர் விடுதலை பெற்றதையும், அவர்களது வனாந்திர பயணம்பற்றியும், சீனாய்மலையில் தேவனாகிய கர்த்தர் தந்த வெளிப்பாடு பற்றியும், தேவன் அவர்கள் நடுவில் தங்கியிருக்க வடிவமைக்கப்பட்ட ஆசரிப்புக்கூடாரம்பற்றியும், அதன்மேல் தேவன்வந்து தங்கியிருந்ததுபற்றியும் யாத்திராகமப் புத்தகம் நமக்கு சரித்திரக்குறிப்புக்களைத் தருகிறது.

பொதுவாக பழைய ஏற்பாடு முழுவதையுமே தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் **ஆதி.3:15**-ல் கொடுத்த மீட்பின் வாக்குத்தத்தத்தை விவரித்துச் சொல்லும் **சம்பவத்தொடர்** என்றே எடுத்துக்கொள்ளலாம். ஆபிரகாமுக்கும் அதே மீட்பின் திட்டத்தை ஆதி.12:1-3-ல் தேவன் தந்தார். அதன் தொடர்ச்சியை சொல்வதே யாத்திராகம புத்தகமுமாகும். இந்த இரட்சிப்பின் திட்டத்தைச் சொல்லும் சம்பவத்தொடரானது கிறிஸ்து பிறந்து **(யோவான் 3:16),** பாடுபட்டுமரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, உயிரோடெழுந்து, பரலோகத்துக்கு ஏறிச்சென்ற சம்பவத்தோடு நில்லாமல், அவர் மறுபடியும் மகிமையில் இறங்கிவந்து தமது சபையை அழைத்துச் செல்லும்வரையிலும் தொடரும். நாம் இயேசுவை சிங்காசனத்தில் வீற்றிருக்கும் இரட்சகராய்க் காண்போம்!

யாத்திராகமம் "**விடுதலை யாத்திரை**"யைப் பற்றிய புத்தகம். இரட்சகர் இல்லாமல் விடுதலையில்லை. அதற்காக மோசே என்ற இரட்சகனை தேவன் எழுப்பினார்.

அப்படியே, நமது விடுதலையாத்திரைப் பயணத்திலும், இயேசுவே நமது இரட்சகர் அவர் நம்மை பரம கானான் வரைக்கும் கொண்டுசேர்ப்பார் என்பது நிச்சயம். விசுவாசத்தையும் கீழ்படிதலையும் மட்டுமே தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார், தொடர்ந்து பயணம் செய்வோம்! பரம கானானைச் சென்றடைவோம்!!

# கொரோனா வைரஸின் பிடியில் சிக்காமல் இருக்க
# புதிய வாழ்க்கை முறை

மனிதர்கள் நடுவில் கண் காணாமல் பதுங்கியிருக்கும் கொரோனா வைரஸின் பிடியில் சிக்காமல் வேலை செய்யவும், அன்றாட வாழ்வை நடத்தவும் ஏதுவான ஒரு "புதிய வாழ்க்கை முறை"யை, ஜப்பான் அரசு அறிவுறுத்தியிருந்தது. கொரோனா வைரஸின் ஆதிக்கம் / ஆற்றல் அழிக்கப்படும் வரை இந்த 'புதிய வாழ்க்கை முறை'யை ஏற்றுக்கொள்ளவும், கற்றுக்கொள்ளவும், கடைபிடிக்கவும் மக்கள் வலியுறுத்தப்பட்டுள்ளனர். பகுத்தறிவு, அறிவியல், இடர்பாடுகள் மேலாண்மை கோட்பாடுகளின் அடிப்படையில், நடைமுறைக்கு ஏற்ப இந்த 'புதிய வாழ்க்கை முறை' வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த "புதிய வாழ்க்கை முறை" நமக்கும் பிரயோஜனமுள்ளதாகையால் உங்களோடு பகிர்ந்துகொள்கிறேன்.



**மூன்று முக்கியமான ஒழுங்குமுறைகள் :**

1. சமூக இடைவெளி
2. முகக்கவசம் அணிதல்
3. கைகளை அடிக்கடி கழுவுதல்

**கடைபிடிக்க வேண்டிய மற்ற ஒழுங்குமுறைகள் :**

1. மனிதர்களுக்கிடையே இரண்டு மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும்.
2. வெளியில் சென்று வீடு திரும்பியதும் குளித்து, உடைகளை துவைக்க வேண்டும். உப்பு நீர் கொண்டு வாய் கொப்பளிக்க வேண்டும் (Gargle with salted water).
3. ஒருவருடன் மற்றவர் பேசும்போது நேர் எதிராக நின்று பேசாமல் பக்கவாட்டில் நின்று பேசுதல் உகந்தது.
4. யாரையாவது தொட நேர்ந்தால் உடனே கைகளை கழுவ வேண்டும்.
5. பொருட்களை வாங்கவும், பணம் செலுத்துவதற்கும் கூடியமட்டும் இணையவழி (Online) முறையை பயன்படுத்தவும்.
6. பல்பொருள் அங்காடிகளுக்கு (Super-Markets) செல்லும்போது, தனியாக செல்வதையும், கூட்டம் குறைவாக இருக்கும் நேரத்தையும் தெரிவு செய்யவும்.
7. அனைத்து அங்காடிகளிலும் மாதிரிக்கு வைக்கப்பட்டுள்ள பொருட்களை (Sample products) தொடுவதை தவிர்க்கவும்.
8. உள்அரங்க விளையாட்டுக்கள், பொது நீச்சல் குளங்களை பயன்படுத்துதலை தவிர்க்க வேண்டும்.
9. பொது போக்குவரத்தை பயன்படுத்துபோது கையுறை (Gloves), முக உறை (Mask), முகக்கவசம் (Face Shield) அணியவும், சமூக இடைவெளியை கடைப்பிடிக்கவும்.
10. சொந்த வாகனங்கள் வைத்திருப்போர் பொதுப்போக்குவரத்தைத் தவிர்க்கவும்.
11. அருகாமையில் உள்ள இடங்களுக்கு நடந்து செல்லவும்.
12. குழுக்கூட்டங்களை காணொளி முறையில் (Video-conference) நடத்தவும்.
13. நேரில் சந்திக்கும் கூட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான நபர்கள்

கூடுவதைத் தவிர்க்கவும், முக உறைகள் (Face Masks) அணியவும். காற்றோட்டத்திற்காக ஜன்னல், கதவுகளை திறந்து வைக்கவும்.

14. கூடியவரையில் 'வீட்டில் இருந்து பணிசெய்தல்' (Work from home), ஜனநெரிசல் குறைவான நேரங்களில் பயணித்தல் போன்றவற்றைக் கடைபிடிக்கவும்.
15. அவசியமின்றி வெளிநாட்டு பயணங்கள் செய்வதை தவிர்க்கவும்.
16. தேவையற்ற வியாபார பயணங்கள் மேற்கொள்ளுதல், உறவினர், நண்பர்கள் வீடுகளுக்கு செல்லுதல், சுற்றுலா செல்லுதல் வேண்டாம்.
17. உங்களுக்கு ஏதேனும் கொரோனா அறிகுறிகள் இருந்தால், நீங்கள் கடைசியாக சென்ற இடம், சந்தித்த நபர் ஆகியவற்றை நினைவில் கொண்டு அந்நபரையும் எச்சரிக்கவும், நீங்களும் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறவும்.
18. பிறருடன் உணவருந்தும்போது நேருக்கு நேர் அமராமல், பக்கவாட்டில் போதிய இடைவெளி விட்டு அமர்ந்து உண்ணவும்.
19. நிறைய காய், கனிகள், புரதச்சத்து மிகுந்த உணவுகள் (Protein-rich food) உண்ணவும். இவை நோய் எதிர்ப்பு சக்தியைத் தரும்.
20. திருமணம் போன்ற நிகழ்வுகளுக்கு அளவுக்கு அதிகமான நபர்களை அழைப்பதை தவிர்க்கவும்.
21. கூடுமானவரையில் வெளியே உணவு உண்பதைத் தவிர்க்கவும். குறிப்பாக 'தட்டு சேவை' முறையை (Buffet) கட்டாயம் தவிர்த்துவிடவும்.
22. கூட்ட நெரிசலான இடங்களுக்கு செல்லாதீர்கள். எப்பொழுதும் உங்களிடம் 'கிருமிநாசினி' (Sanitizer) வைத்திருங்கள். இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை 'கிருமிநாசினி' பயன்படுத்தி கைகளை சுத்தம் செய்யவும்.
23. தினமும் நமது உடலின் வெப்பநிலையை பரிசோதித்தல் நல்லது. ஆக்ஸிமீட்டர் (Oximeter) ஒன்று வாங்கி வைத்து உடலில் உள்ள ஆக்ஸிஜன் சதவீதத்தையும் இதயத்துடிப்பு Pulse வீதத்தையும் பரிசோதித்தல் நல்லது. அனுதினமும் காலை மாலை இரு வேளையும் மூச்சு பயிற்சி செய்வது மிகவும் நல்லது.
24. சுத்தமான குடிநீர் குறிப்பாக சுடுநீர் அருந்துதல் பாதுகாப்பனது, குளிர்பானங்கள், ஐஸ்கிரீம், குளிர்சாதனப் பெட்டியில் பதப்படுத்தப்பட்ட (Frozen foods) உணவுகளை சாப்பிடாமல் இருப்பது நல்லது.
25. வீட்டையும், குறிப்பாக கழிவறை, குளியல் அறைகளை மிகவும் சுத்தமாக வைத்துக்கொள்ளவும்

கொரோனா வைரஸிற்கான செயலாற்றல் மிக்க தடுப்பு மருந்து தயாரிக்கப்பட இன்னும் ஒன்றரை ஆண்டுகளாவது ஆகும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். அதுவரையில் இந்த பொது எதிரியை (Corona Virus) சமாளித்து வாழ மக்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும், அதற்கு இந்த 'புதிய வாழ்க்கை முறை'யை கடைப்பிடிப்பதே வழி எனவும் கூறுகின்றனர். கொரோனா வைரசுடன் மனிதகுலம் நடத்தும் இந்தப்போர் 'காலவரையற்றது' (indefinite) என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அதுவரை நாம் ஒவ்வொருவரும், பாதுகாப்புடனும், கட்டுப்பாடுடனும், பொறுப்புணர்வுடனும் இந்த 'புதிய வாழ்க்கை முறை'யை பின்பற்றி வாழ்வதே சாலச் சிறந்தது.

**– தொகுப்பு**



# மாற்றங்களைக் கொண்டு வரும் பெண்கள்

**திருமதி. கெட்சியாள் மோகன்**

தலைவர், தமிழ் பிரதேச பெண்கள் ஊழியங்கள்

பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். நாம் கடந்து செல்கிற பாதைகள் வித்தியாசமாயிருந்தும் நாம் ஆராதிக்கிற தேவன் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவையும் உண்டாக்கினவர் அவர் உண்மையைக் காக்கிறவர். சதாகாலங்களிலும் அரசாளுகிறார். தலைமுறை தலைமுறையாகவும் ராஜரீகம் பண்ணுகிறார்.

மோசேக்கு எழுதிக் கொடுத்த சட்டங்களை மாற்றிய செலோப்பியாத்தின் குமாரத்திகள் (எண். 27:1-11).

செலோப்பியாத்தின் குமாரத்திகளாகிய மக்லாள்: நோவாள்: ஒக்லாள்: மில்காள்: திர்சாள் ஆசரிப்புக் கூடார வாசலிலே மோசேக்கும் ஆசாரியனாகிய எலேயாசாருக்கும்; பிரபுகளுக்கும் சபையனைத்திற்கும் முன்பாக நின்று எங்கள் தகப்பனுடைய சகோதரருக்குள்ளே எங்களுக்கு காணியாட்சியை கொடுக்க வேண்டும் என்றார்கள். மோசே அவர்களுடைய நியாயத்தை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு போனபோது கர்த்தர் மோசேயை நோக்கி செலோப்பியாத்தின் குமாரத்திகள் சொல்லுகிறது சரிதான். நியாய விதிப் பிரமாணத்தை மாற்றிக் கொடுத்தார்கள். யோசுவாவின் காணியாட்சியைப் பெற்றுக் கொண்டார்கள்.

தெபோராளின் காலத்தில் சிசெராவினால் இஸ்ரவேல் ஜனங்கள் ஒடுக்கப்பட்டபோது தேவனை நோக்கி கூக்குரலிட்டு பாராக்கோடு யுத்தத்தில் நின்று 40 வருடமாக சமாதானமுள்ள தேசத்தை பெற்றுக்கொண்டாள். சிசெராவின் தலையை உடைக்க தலைக்குள் இருந்த சகல திட்டங்களையும் சிதறடிக்க ஒரு கூடாரவாசியாகிய யாகேலை தெரிந்து கொண்டார். நியா.5ஆம் அதிகாரம். எஸ்தர் ராஜாத்தியை தெரிந்துக்கொண்டு ஆமானின் திட்டங்களை அதமாக்கி காரியங்களை மாறுதலாக முடியபண்ணின தேவன் இன்றைக்கும் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். சகோதரிகள் இணைந்து ஒருமனப்பட்டு ஜெபிக்கும்போது மாறுதலைக் கொண்டுவருவார்கள்.

இந்த காலத்தில் கர்த்தர் நம்முடைய தேசத்திற்கு மாறுதலை எழுப்புதலைக் கொண்டுவரும்படி ஜெபம் பண்ணலாம். உன்னதத்திலிருந்து நம்மேல் ஆவி ஊற்றப்படும் மட்டும் அப்படியிருக்கும். ஏசாயா 32:15. வனாந்திரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து கடுவெளி களித்து புஷ்பத்தைப் போலச் செழிக்கும். வெட்டாந்தரை தண்ணீர்த்தடாகமும் வறண்ட நிலம் நீரூற்றுகளுமாகும்.

பின்மாரிக் காலத்து மழைக்காக வேண்டிக் கொள்ளுங்கள். எழுப்புதல் தேசங்களில் சபைகளில் மாறுதல் வர வேண்டிக் கொள்ளுங்கள். ஆதி திருச்சபையில் அப்.1:14 வாக்குத்தத்தம் நிறைவேற ஆவியானவர் ஊற்றப்பட ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தனர். சகோதரிகளே எல்லா சபைகளிலும் ஒருமனப்பட்டு உன்னதத்திலுள்ள ஆவி ஊற்றப்படுகிறதினால் திரளான மக்கள் சபைக்கு ஓடிவர, பாவங்களைக் குறித்து உணர்த்தப்பட, மனந்திரும்ப மெய்யான தேவனைக் குறித்து அறிவு உண்டாக, மனக்கண்கள் திறக்கப்பட ஊக்கமாக ஜெபம் பண்ணலாம். பிறவி

சப்பாணி தேவாலயத்தில் வெளியே பிச்சைக் கேட்டுக்கொண்டிருந்த மனிதன் ஆலயத்தில் பிரவேசித்து தேவனைத் துதித்தது போல அற்புதங்கள் நடைபெறட்டும். ஜெபம் அதிகரிக்கும் பரலோகத்தின் வல்லமை பூமியில் செயல்படட்டும். எழுப்புதலுக்காக ஜெபம் பண்ணின அநேக சகோதரிகளை எடுத்து பயன்படுத்தினார். இந்த நாட்களிலும் எடுத்து கர்த்தர் பயன்படுத்துவார்.

எழுப்புதல் வர பரிசுத்தாவியானவரின் சந்திப்பு வர நாள்தோறும் இடைவிடாமல் ஜெபத்தில் தரித்திருங்கள். மனத் தாழ்மையோடுள்ள விசுவாசத்துடன் எதிர்பார்க்கிற இருதயங்களை ஆண்டவர் தேடிக் கொண்டிருக்கிறார். ஆயத்தப்படுங்கள். பரிசுத்தப்படுத்திக் கொள்ளலாம். நிச்சயம் நமது தேசமும் எழுப்புதலைக் காணும், தேசத்தில் மாற்றம் ஏற்படும்.

---

## LAY LEADERSHIP TRAINING
## பட்டமளிப்பு விழா



தேவனுடைய பெரிதான கிருபையினால் திண்டுக்கல் மண்டலம் கொடைக்கானலில் உள்ள கல்வாரி ஏ.ஜி.சபையில் LAY LEADERSHIP TRAINING மூலமாக வீட்டு சபை கல்வியில் இணைந்து 13 பேர் படித்து முடித்து கடந்த 2021 மார்ச் 14-ஆம் தேதி ஞாயிறு அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்றுக்கொண்டார்கள்.

LAY LEADERSHIP TRAINING PROGRAM-ன் இயக்குநர் Rev.சார்லஸ், (TBC) அவர்கள் பட்டமளிப்பு விழாவை தலைமையேற்று நடத்தினார்கள். மண்டல தலைமை போதகர் Rev.Dr.L.ஜெயபாலன் அவர்கள் தேவ செய்தியைப் பகிர்ந்து கொண்டு ஆசீர்வதித்தார்கள். மேலும், மண்டலத்திலுள்ள போதகர்கள் Rev.இஸ்ரவேல் ஜெயராஜ், Rev.ஹென்றி ரவிச்சந்திரன் மற்றும் Rev.தாமஸ் ஆகியோர் வாழ்த்துச் செய்திகளைப் பகிர்ந்து கொண்டு உற்சாகப்படுத்தினார்கள்.

பட்டம் பெற்றதில் ஒருவர் குடும்பமாக கிளை சபை ஒன்றை ஆரம்பித்து ஊழியம் செய்து வருகிறார். இரண்டு பேர் குடும்பமாக வீட்டு சபையை ஆரம்பித்து ஊழியம் செய்து வருகிறார்கள். ஒருவர் மாணவர் மத்தியிலும், மற்றவர்கள் சபையிலும் வெளியிலும் தேவையான ஊழிய உதவிகளைச் செய்து தேவனுக்காக பயன்படுகிறார்கள். தேவனுக்கே மகிமை

Rev.ராஜா, சபை போதகர்

---

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ. **1,00,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.



# பின்வரும் சந்ததி

Rev. I. அலெக்ஸாண்டர்
விஷன் 2020 ஜெப ஒருங்கிணைப்பாளர்

பின்வரும் சந்ததியான பிள்ளைகளுக்கு நாங்கள் அவைகளை மறைக்காமல், கர்த்தரின் துதிகளையும் அவருடைய பலத்தையும், அவர் செய்த அவருடைய அதிசயங்களையும் விவரிப்போம் (சங் 78:4).

நாம் நம்முடைய பிள்ளைகளுக்கு எப்படிப்பட்ட ஆவிக்குரிய பாரம்பரியத்தை விட்டுப் போகிறோம்? இஸ்ரவேல் கர்த்தருடைய வார்த்தைகளையும், தேவனுடைய வழிகளையும் தன் சந்ததிக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். (உபா.6:20-25; 6,7).

சங். 78:7-ல் 1.தேவன் மேல் அவர்கள் நம்பிக்கையை வைக்கவும்.

2.தேவனுடைய செயல்களை நினைவில் வைக்கவும்.

3.கற்பனைகளைக் கைக்கொள்ளும்படிக்கும் நாம் நம் சந்ததிக்குப் போதிக்க வேண்டும்.

## 1.தேவன் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும்

சங்.48:11 கர்த்தர் பெரியவர் Our God is Great (வசனம்14). இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார். தேவன் பேரில் நம்பிக்கைவைக்கும்போது தான் எதிர்காலம் மிகவும் ஆசீர்வாதமாயிருக்கும். பரிசுத்த பேதுரு நம்பிக்கையின் அப்போஸ்தலன். அவனுடைய பெரிய நம்பிக்கை இயேசு மறுபடியும் வருவார் என்பதுதான், (II பேதுரு 3:4-12, ரோமர் 12:12). நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள். இன்றைய (சந்ததியினர்) தலைமுறையினர் தங்கள் நம்பிக்கையை பணத்தின்மீதும், பலத்தின்மீதும், அனுபவத்தின்மீதும், அரசாங்கத்தின்மீதும் வைக்கிறார்கள். நாம் நம்முடைய தேவன் எப்படிப்பட்டவர் என்பதை நம்முடைய சந்ததிக்கு தெரிவிப்பதின்மூலம் அவர்கள் தேவனின் ஆசீர்வாதங்களை அறிய முடியும். லூக்கா12:16-21-ல் உள்ள உவமையில் தேவனிடத்தில் ஐசுவரியமுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்று இயேசு வலியுறுத்தினார்.

## 2.தேவனுடைய செயல்களை அவர்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும்

சங்.78:10,11-ல் 'அவர்கள் தேவனுடைய உடன்படிக்கையை கைக்கொள்ளாமலும், அவருடைய கட்டளையின்படி நடக்கச்சம்மதியாமலும், அவருடைய செயல்களையும் அவர் தங்களுக்குக் காண்பித்த அதிசயங்களையும் மறந்தார்கள்.'என்று வாசிக்கிறோம். சங்.103:1,2 என் ஆத்துமாவே ... ... ...அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. 1இராஜா.19:20-ல் எலியா எலிசாவைப் பார்த்து நான் உனக்குச் செய்ததை நினைத்துக் கொள் என்றான்.

## 3.கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும்

சங்கீதம் 78:10-ல் தேவனுடைய உடன்படிக்கையைக் கைக்கொள்ளவில்லை என்று வாசிக்கிறோம். இன்று திருச்சபைகளில் நிர்விசாரம். எசே.16:49. 'இதோ கெர்வமும், ஆகாராத் திரட்சியும், நிர்விசாரமான சாங்கோபாங்கமுமாகிய இவைகளே உன் சகோதரியான சோதோமின் அக்கிரமம்'. மோசேயின் மனைவி சிப்போராள் நிர்விசாரமாயிருந்தாள்-(யாத்.4:24) வழியிலே தங்குமிடத்தில் கர்த்தர் அவனுக்கு எதிர்பட்டு, அவனைக் கொல்லப்பார்த்தார் என்று வாசிக்கிறோம்-யாத்.4:25,26 பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் பண்ணவேண்டிய உடன்படிக்கையை

நிறைவேற்றுவதில் நிர்விசாரமாயிருந்தாள். பின்னர் சூழ்நிலையை அறிந்து செயல்பட்டாள். இது நமக்கு மிகப்பெரிய உத்திரவாதம் இருக்கிறது என்பதை போதிக்கிறது.

**நாம் எப்படி சிறந்த மாதிரிகளாக இருக்க முடியும்**

1. நம்முடைய போதனையின் மூலம் - (Teaching)
2. நம்முடைய பகிர்ந்துகொள்ளுதல் மூலம் - (Sharing)
3. நம்முடைய உற்சாக மூட்டுதலின் மூலம் - (Encouraging)

**நீங்களும், நானும் பின் சந்ததிக்காக எதையோ விட்டுப்போகிறோம்?**

மிகச் சிறந்த தேவமனிதர்கள் தங்கள் சந்ததிக்காக எதை விட்டுப்போனார்கள்? இரண்டு உதாரணங்களை கூற விரும்புகிறேன் 1. ஆபிரகாம் 2. தாவீது

**I.ஆபிராகம்**

இவர் பின்சந்ததிக்காக பலிபீடத்தையும், துரவுகளையும் விட்டுச் சென்றார்.

1. ஆதி 13:1-4, பலிபீடம்
2. ஆதி 26:24,25 துரவுகள்

**1.பலிபீடம் :** தேவனோடுள்ள உறவையும், தேவ ஆராதனையையும் குறிக்கிறது. The purpose of creating mankind – மனிதனை தேவன் சிருஷ்டித்ததின் நோக்கமே தேவனோடு உறவாடுவதற்கு தான். ஆராதனை உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக. (லூக்.4:8). பணத்தையோ, பதவியையோ, மனிதர்களையோ நமக்கு ஆராதனை பொருளாக்கிவிடக் கூடாது. இயேசு ஒருவர் மாத்திரமே ஆராதனைக்குரியவர். தேவன் கொடுத்த பத்து கற்பனைகளில் 'என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் மேலே வானத்திலும் கீழே பூமியிலும், பூமியின் கீழ்தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம். உபா.5:7-9-ல் வாசிக்கிறோம். தேவனை ஆராதிக்க பின்சந்ததிக்குப் போதிக்க வேண்டும்.

**2.துரவுகள்:** தேவன் அன்றாடம் நம்முடைய தேவைகளை சந்திக்க வல்லவர் என்பதைக் காண்பிக்கிறது.

துரவில் தண்ணீர் சுரக்கும். துருத்தியின் தண்ணீரையல்ல துரவின் தண்ணீரையே சார்ந்திருக்க வேண்டும். ஆபிரகாம் தோண்டிய விசுவாச துரவுகள் எதிரிகளால் மூடப்பட்டது. ஈசாக்கு அதையே தோண்டினான் பலன் அடைந்தான். கர்த்தரும் அவனோடு இருந்தார்.

தண்ணீர் பரிசுத்த ஆவியின் ஊழியத்தைக் குறிக்கிறது. இயேசுவும் யோவான் 7:37-39-ல் அதைக் குறிப்பிட்டார்' தண்ணீர் தேவ பிரசன்னத்தையும், நம்மை இளைப்பாறப்பண்ணும் அனுபவத்தையும் குறிக்கிறது. They should worship God & depend upon Him.

**II.தாவீது:** அப்.13:36-ல் தாவீது தன்காலத்தில் தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியம் செய்த பின்பு நித்திரையடைந்து served his own generation. what was David's legacy.

**A.தேவனை ஆராதிப்பதற்காக பாடல்களையும் வாத்தியக் கருவிகளையும் தனக்குப் பின்வரும் சந்ததிக்காக விட்டுப்போனான்,** 2நாளா.29:25-30, நெகே.2:36 ஆகிய வசனங்களில் இஸ்ரவேல் தேசம் சிறந்த முறையில் தேவனுக்கு ஆராதனை செய்ய முடிந்தது (Because of the musical heritage that King David left behind).

**தாவீதுதான்** 1.ஆராதனையில் பாடகர் குழு நியமிக்கப்படவும் 2.அநேக சங்கீதங்கள் எழுதவும் 3. இசை வளரவும் 4. லேவியர்கள் பயன்படுத்திக் கீதவாத்தியங்கள் அபிவிருத்தி செய்யப்படவும் காரணமாயிருந்தவன். தேவனை ஆராதிப்பதின் அவசியத்தை இந்த சந்ததிக்கு கொடுக்க முக்கியத்துவம் கொடுக்கிறோமா?

**B. தாவீது எதிரிகளை மடங்கடிக்கக் கூடிய ஆயுதங்களையும் விட்டுச் சென்றான்** 2 இராஜா.11:10 வாசிக்கவும்.

**சாத்தான் நம்முடைய சந்ததியில் நம்மைத் தோற்கடிக்க முடியாவிட்டால் நம்முடைய அடுத்த சந்ததியை தாக்க முற்படுவான்.**

நாம் நம்முடைய பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் சாத்தானை மேற்கொள்ள தேவையான ஆயுதங்களை ஆயத்தப்படுத்தியிருக்கிறோமா?

It has been said that the 1st generation fights the battle. 2nd generation claims the spoils and enjoy them & the 3rd generation sells out to the enemy.

**III. யோசுவாவின் தலைமுறை:**

யோசுவாவின் தலைமுறையினர் தேவனை சேவித்து வந்தார்கள். யோசுவாவுக்கு பின் வந்த சந்ததியும் தேவனை பின்பற்றினர். ஆனால் மூன்றாம் தலைமுறையினர் தேவனை விட்டுத் தூரம்போய் உலகத்தைப் பின்பற்ற ஆரம்பித்தனர். இது நம் அனைவருக்கும் ஒரு எச்சரிப்பாக இருக்கிறது. நாம் நம்முடைய சந்ததியை தேவன்மேல் நம்பிக்கை வைக்க தேவனுடைய செயல்களை நினைவில் வைக்க, தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்ளும்படி செய்யாவிட்டால் நாம் நம்முடைய சந்ததியை கிறிஸ்துவில் நிலைத்திருக்க செய்ய முடியாது. எனவே இதை நினைவில் வைத்து நம்முடைய சந்ததியின் மேல் நமக்குள்ள உத்திரவாதத்தை உணர்ந்து செயல்படுவோமாக.

1. யோசுவா 24:31 2.நியா 2:6-13 ஆகிய பகுதிகளில் எதிரியானவன் இன்றும் வல்லமையோடு கிரியை செய்கிறான் என்பதை இந்த தலைமுறையினருக்கு சொல்லி எச்சரிக்க வேண்டும். (We must warn the generation to overcome that the enemies' still active). அத்தோடு அவர்கள் கையில் தேவையான ஆயுதங்களை கொடுத்து யுத்தம் செய்து ஜெயம் பெறச் செய்ய வேண்டும். (We must put into their hands the weapon they need to fight a winning battle). நாம் அவர்கள் கையில் கொடுக்க வேண்டிய ஆயுதம் 1.தேவனுடைய வசனம் (The word of God) 2.ஜெபம் (Prayer) 3.பாவத்திலிருந்து வேறுபட்ட வாழ்க்கை (Separation from Sin) 4.விசுவாசம் (Faith).

**இரண்டு குடும்பங்களின் சந்ததியைக் குறித்த விவரங்கள்:**

**1.மாக்கீஸ் கிக்ஸ்** – நாத்திகன் – மனைவி தேவனற்ற பெண்.
சபிக்கப்பட்ட குடும்பம்- 560 பின்சந்ததியினர்
310 பேர் தரித்திரராய் மரித்தார்கள் 150 பேர் குற்றவாளிகள்
100 பேர் குடிகாரர்கள், 7 பேர் கொலைகாரர்கள்
பாதிக்கும் மேற்பட்ட பெண்கள் விபச்சாரிகள். 19ஆம் நூற்றாண்டில் அவர்களால் அமெரிக்க அரசுக்கு 1.25 மில்லியன் கடன் சுமை

**2.யோனத்தான் எட்வர்ட்** – பக்தியுள்ள குடும்பம்
1394 வழித்தோன்றல்கள் – 294 அல்லது 295 கல்லூரி பட்டதாரிகள்
13 கல்லூரி முதல்வர்கள், 65 கல்லூரி பேராசிரியர்கள்
30 நீதிபதிகள், 75 இராணுவ அதிகாரிகள்
1 பல்கலைக்கழக முதல்வர், 80 பொதுத்துறை அதிகாரிகள்
100பேர் புகழ்பெற்ற மிஷினரிகள், 100 வழக்கறிஞர்கள்
3 அமெரிக்க நாடாளுமன்ற மேலவை உறுப்பினர்கள்
3 (Governors) மாகாண ஆளுநர்கள், 3 மேயர்கள் பெருநகர தலைவர்கள்
1 அமெரிக்க கணக்கு தணிக்கை அதிகாரி, 1 ஐக்கிய அமெரிக்க குடியரசு துணைத்தலைவர்
இவர்கள் எவரும் அமெரிக்க அரசிற்கு தொல்லை கொடுத்தவர்கள் அல்லர்.

நம்முடைய சந்ததி யோனத்தான் எர்வர்ட் சந்ததி போன்று பக்தியுள்ள சந்ததியாகவும், தேசத்திற்கு ஆசீர்வாதமுள்ள சந்ததியாகவும் நம்முடைய சந்ததியினால் எவருக்கும் பாதிப்பில்லாத சந்ததியாக இருக்க தேவன் நமக்கு கிருபை தருவராக.



# ஆரோக்கியமான உபதேசத்தில் நிலைத்திருங்கள்

**Rev. V.J. பாலஸ்**

தலைமைப் போதகர், சிமிர்னா A.G. சபை, வண்ணாரப்பேட்டை

**மெய்யாகவே அவர் ஜனங்களைச் சிநேகிக்கிறார்; அவருடைய பரிசுத்தவான்களெல்லாரும் உம்முடைய கையில் இருக்கிறார்கள்; அவர்கள் உம்முடைய பாதத்தில் விழுந்து, உம்முடைய வார்த்தைகளினால் போதனையடைவார்கள்** (உபாகமம் 33:3).

மோசே கடைசியாக இஸ்ரவேல் ஜனங்களுக்குச் சொன்ன ஆசீர்வாதங்கள் 33-ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். கடைசியாக மோசே சொன்ன வார்த்தைகள் மிகவும் முக்கியம். மெய்யாகவே கர்த்தர் நம்மை சிநேகிக்கிறார். இதை அறியாத இஸ்ரவேல் ஜனங்கள் குறைகூறினார்கள், பின்வாங்கினார்கள், முறுமுறுத்தார்கள், பரீட்சை பார்த்தார்கள், எதிர்த்து நின்றார்கள், விக்கிரகாராதனை செய்தார்கள்.

அவருடைய பரிசுத்தவான்கள் அவருடைய கையிலே இருக்கிறார்கள். அவருடைய பலத்த கைக்குள் அடங்கி இருந்தால் ஏற்றகாலத்தில் அவர் நம்மை உயர்த்துவார். அவருடைய கையிலே இருந்தால் நமக்கு பாதுகாப்பு இருக்கும், சந்தோஷம், சமாதானம் இருக்கும்.

அவர்கள் பாதத்தில் விழுந்து அவருடைய வார்த்தைகளினால் போதனையடைவார்கள். சரியான போதனை நமக்கு கிடைக்குமானால் நாம் ஆசீர்வதிக்கப்படுவோம். இன்றைக்கு ஜனங்கள் சரியான போதனை கிடைக்காமல் கண்ணிகளிலும் சாத்தானுடைய கள்ள உபதேசங்களிலும் சிக்கி வேதனைப்படுகிறார்கள்,

**பலவிதமான அந்நிய போதனைகளால் அலைப்புண்டு திரியாதிருங்கள்** (எபிரெயர் 13:9).

நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார் (எபேசியர் 4:14, 15).

பலவிதமான போதனைகளை கேட்பதனால் விசுவாசிகளில் அநேகர் ஆரோக்கியமில்லாமல் இருக்கின்றனர். நாம் சுவிசேஷகூட்டங்களை தேடி அலையாமல் அவருடைய பாதத்தில் அமர்ந்து அவருடைய போதனைகளைக் கேட்க நம்மை அர்ப்பணிக்க வேண்டும். பொருத்தமில்லாத உணவை சாப்பிடும்போது நம்முடைய உடலில் பாதிப்பு ஏற்படும். நாம் சுகத்தோடு வாழ வேண்டுமானால் ஆரோக்கியமான ஆகாரத்தை சாப்பிடவேண்டும். அதுபோல நம்முடைய ஆத்துமாவுக்கு தேவையான ஆகாரம் அதாவது ஆரோக்கியமான உபதேசத்தைக் கேட்டால் நம்முடைய ஆத்துமா ஆரோக்கியமாக இருக்கும்

செழித்தோங்கும். நன்மையினால் மகிழும் குழப்பம் இருக்காது. விசுவாசிகள் எளிதாக சோதனைகளில் விழுந்துபோகிறார்கள். ஒரு சிறிய சோதனைகளைக்கூட தாங்கமுடியவில்லை. ஆகவே நாம் குழந்தைகளாயிராமல் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ச்சியடைய அவருடைய பாதத்தில் விழுந்து போதனையடைய வேண்டும். நாம் எந்த நிலைமையில் இருக்கிறோம் என்பதை கர்த்தர் கவனித்துப் பார்க்கிறார். கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. ஆவிக்குரிய வாழ்க்கையிலே நீங்கள் வளரவேண்டும். நாளுக்கு நாள் அவரை அறிகிற அறிவிலே வளர வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். நீங்கள் வளர வேண்டுமானால்.

1 பேதுரு 2:1-3 இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால், சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்.

நம்முடைய துர்க்குணத்தை ஒழித்துவிட்டு தேவனுடைய பாதத்தில் அமர்ந்து அவருடைய வார்த்தைகளை மிகுந்த வாஞ்சையோடு நாம் கற்றுக்கொண்டால் நம்முடைய உள்ளான மனுஷன் பெலப்படுவதைக் காணமுடியும். சோதனைகள் வரும்போது பிரச்சனைகள் வரும்போது அதை எளிதாக மேற்கொள்ள வேண்டுமானால் உள்ளான மனிதன் நாளுக்கு நாள் பலப்பட்டிருக்க வேண்டும். அநேகர் புறம்பான மனிதன் அதாவது இந்த சரீரத்தைக் குறித்து கவலைப்படுகிறார்கள் ஆனால் உள்ளான மனிதனைக் குறித்து கவலைப்படுவதில்லை. சிலர் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு சபைக்குச் செல்வார்கள். அவர்கள் சரியான உபதேசத்தைக் கேட்டு வளர முடியாது. நம்முடைய ஆண்டவர் நமக்கு சரியான உபதேசத்தைக் கற்றுக்கொடுக்கிறார். ஆகவே நாம் அவருடைய பாதத்தில் அமர்ந்து, நம்மைத் தாழ்த்தி, அவருடைய உபதேசத்தைக் கவனமாகக் கேட்டுக் கைக்கொண்டால் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளரமுடியும். ஆமென்.

---


**பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்**

குறிப்பு:- காசோலை / டிராப்ட் எடுக்கும்போது

**Tamil District Council of SIAG** என்று எடுத்து

பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும்.

மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும்.

பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**ஏ.ஜி. தலைமை அலுவலகம்**

**30, நாவலர் நகர், மதுரை - 625 016. போன் : 0452 2301165.**


---

# வெயிலைச் சமாளிப்பது எப்படி?

## HOW TO BEAT THE HEAT?



இந்த ஆண்டில் கோடைக் காலம் தொடங்கியதை அடுத்து தமிழகம் மற்றும் தென் மாநிலங்களில் வெயில் கடும் பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது. கோடை வெப்பத்தால் சென்ற ஆண்டில் இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகம். இப்போதே முறையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தால், உயிரிழப்புகளைப் பெருமளவு தடுக்க முடியு ம். கொளுத்தும் கோடை வெயிலைச் சமாளிக்க எளிய வழிகள் உண்டு.

**வெப்பத்தைத் தணிக்க:**

கோடையில் தினமும் இரண்டு வேளை குளிக்க வேண்டும். மூன்றிலிருந்து ஐந்து லிட்டர் தண்ணீர் குடிப்பது அவசியம். ஐஸ் தண்ணீரை விட, மண் பானைத் தண்ணீர் நல்லது. எண்ணெயில் பொரித்த, வறுத்த, கொழுப்பு அதிகமுள்ள உணவுகளைத் தவிர்க்க வேண்டும். சர்க்கரை அதிகமுள்ள இனிப்புப் பலகாரங்கள், கிரீம் மிகுந்த பேக்கரி பண்டங்கள், பர்கர், பீட்ஸா, ஐஸ்கிரீம் போன்றவற்றையும் தவிர்ப்பது நல்லது. அதே போல், சூடான, காரமான, மசாலா கலந்த, உப்பு நிறைந்த உணவுகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

இட்லி, இடியாப்பம், தயிர்சாதம், மோர் சாதம், கம்பங்கூழ், அகத்திக் கீரை, முருங்கைக் கீரை, பொன்னாங்கண்ணிக் கீரை, கேரட், பீட்ரூட், பீர்க்கங்காய், வெண்டைக்காய், முள்ளங்கி, பாகற்காய், புடலை, அவரை, முட்டைக்கோஸ், வாழைத்தண்டு, வெங்காயப் பச்சடி, தக்காளிக்கூட்டு முதலியவை சிறந்த கோடை உணவுகள். மாலை வேளைகளில் வெள்ளரி சாலட், தர்பூசணி சூப், தக்காளி சூப் வகைகளைச் சாப்பிடலாம். திராட்சை, சாத்துக்குடி, ஆரஞ்சு, எலுமிச்சை, மாதுளை, முலாம் பழம், ஆப்பிள் போன்றவற்றின் பழச்சாறுகளையும் அருந்தலாம். நுங்கு, கிர்ணி, கொய்யா போன்றவையும் உடல் வெப்பத்தைத் தணிக்க உதவும்.

காபி, தேநீர் மற்றும் குளிர்பானங்கள் குடிப்பதைக் குறைத்துக் கொண்டு, இளநீர், நீர்மோர், நன்னாரி சர்பத், பானகம், பதநீர் முதலியவற்றை அதிகமாகக் குடிக்கலாம். இளநீரில் உள்ள பொட்டாசியம், சோடியம், கால்சியம், மெக்னீசியம் முதலிய தாதுக்கள் உடலின் வெப்ப நிலையை உள்வாங்கி, சுற்றுச் சூழல் வெப்பநிலைக்கு ஏற்றபடி உடலின் வெப்பத்தைக் குறைக்கின்றன. இதனால், உடலில் நீரிழப்பால் ஏற்படுகின்ற பாதிப்புகள் உடனடியாகக் குறைகின்றன.

**வெயிலைச் சமாளிக்க :**

கோடைக் காலத்தில் தொடர்ந்து 2 மணி நேரத்துக்கு மேல் வெயிலில் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். பகல் 11 மணியிலிருந்து மாலை 4 மணி வரை வெளியில் செல்லாமல் இருப்பது நல்லது. பகலில் வெளியில் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால், தலைக்குத் தொப்பி போட்டுக் கொள்ள வேண்டும் அல்லது குடை கொண்டு செல்ல வேண்டும். கண்களுக்குச் சூரியக் கண்ணாடி அணிந்து கொள்ளலாம். சருமத்தில் 'சன் ஸ்கிரீன் லோஷனைப் பூசிக்கொள்ளலாம். கைவசம் சுத்தமான தண்ணீர் எடுத்துக்கொள்ள வேண்டியது மிக மிக முக்கியம். காற்றோட்டமான கதர், பருத்தி ஆடைகள் கோடைக் காலத்துக்கு ஏற்றவை. இறுக்கமான ஆடைகளைத் தவிர்த்து, தளர்வான ஆடைகளை அணிய வேண்டியது முக்கியம். ஒவ்வொரு வருடமும் அதிகரித்து வரும் வெயில் ஒரு சவால் தான். ஆனால், அதில் இருக்கும் ஆபத்துகளை முழுமையாகப் புரிந்துகொண்டால், அதன் பாதிப்புகளிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். நம் ஆரோக்கியம் நம் கையில்!

– பொதுநல மருத்துவர்



# குடும்பத்தைக் கட்டுகிற புருஷனாயிரு


## Rev.பாலன் P.சாம்சன்

ஷைன் ஏ.ஜி. சபை, கூடுவாஞ்சேரி


பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு AG ஆண்கள் ஐக்கியத்தின் சார்பில் இனிய வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

ஒரு சபை ஊழியத்தை கட்டுகிற பொறுப்பு, எப்படி அந்த சபை ஊழியர் மேல் இருக்கிறதோ அதுபோலவே ஒரு குடும்பத்தை கட்டுகிற மிகப் பெரிய பொறுப்பு ஒவ்வொரு புருஷர் மேலும் இருக்கிறது.

இதற்கு வேதத்தில் புற ஜாதிய மதத்தில் இருந்து, யூத மதத்திற்கு மாறிய ஒரு புருஷரை முதலாவது பார்ப்போம். இவர் பெயர் கொர்நேலியு. இவர் நூற்றுக்கு அதிபதி என்ற பதவியில் ரோம படையில் இருந்தவர். அப்.10-ம் அதிகாரம் இவரைக் குறித்து விளக்கம் கொடுக்கிறது.

சபை வரலாற்றில் அப்போஸ்தலர் நடபடிகள் 10-ம் அதிகாரம் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்திய ஒன்றாகும். இது தான் புறஜாதி மனிதரை யூத ஐக்கியத்தில் சேர்க்கும் விசேஷித்த நிகழ்ச்சியை விளக்குகிறது. இந்த நூற்றுக்கு அதிபதிகள் என்பவர்கள் ரோம படையின் முதுகெலும்புகள் எனலாம். இவர்கள் எதிர்ப்புகளும், பிரச்சனைகளும் வரும் இடத்தில் உறுதியாய் நிற்கவும் தேவையேற்பட்டால் மரிக்கவும் ஆயத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

கொர்நேலியு இந்த பண்புள்ள ஒரு தேவ பக்தர். தங்கள் குல தெய்வங்களையும், ஆசாரங்களையும் வெறுத்து யூத மதத்தை ஏற்றுக் கொள்பவர்களை சாதாரணமாக தேவ பக்தியுள்ளவர்கள் என குறிப்பிடுவதுண்டு. இந்த வேதபக்தியுள்ள கொர்நேலியு தேவனை தேடுகிறவராயிருந்தார். தேவனை கண்டடைந்தவராயிருந்தார், தான தருமங்கள் செய்கிறவராயிருந்தார், நல்ல ஜெபவீரருமாயிருந்தார்.

அப்.10:2 கொர்நேலியு என்னப்பட்ட அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணி கொண்டிருந்தான்.

### புருஷர்கள் தேவபக்தியுள்ளவர்களாய் இருங்கள்

உன்னுடைய தேவபக்தி என்பது முதலாவது உன் தனி ஜெபத்தில், அனுதினம் வேதம் வாசிப்பதில், தவறாமல் சபை ஆராதனையில் பங்கு பெறுவதில், ஊழியத்தில் முதல் ஆளாக இணைத்துக் கொள்வதில் ஆரம்பிக்கிறதாய் இருக்கட்டும்.

இப்படிப்பட்ட அன்றாட வாழ்க்கை முறை, முதலாவது குடும்பத்தினர் மத்தியில் நீங்கள் தேவபக்தியுள்ளவர் என்பதையும், இரண்டாவது சமுதாயத்தில் நீங்கள் நல்ல தேவபக்கியுள்ளவர் என்பதையும் அறிந்திருக்க வாய்ப்பாக அமையும்.

ஒரு முறை, தவறாது சபைக்கு போகிற ஒரு குடும்பத்தினரைக் தேடி ஒருவர் காலை 9 மணிக்கு வந்து வாசல் கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறார். சத்தம் கேட்டு வந்த பக்கத்து வீட்டார், அவரிடம் விசாரித்தபோது இப்போது இந்த குடும்பத்தை நீங்கள் பார்க்க முடியாது, இன்று ஞாயிற்றுக்கிழமை அவர்கள் குடும்பமாக சபைக்கு போயிருக்கிறார்கள். 11.30 மணிக்கு வந்தால் பார்க்கலாம் என்று தெளிவாக சொல்லி அனுப்பினார்களாம். இதிலிருந்து நாமறிவது என்ன பாருங்கள், சமுதாயத்தில் பக்கத்திலுள்ளவர்களும் நமது நிலைப்பாடு என்னவாக இருக்குமென்பதை அறிந்துள்ளனர். அந்த குடும்பத்தினரின் தேவபக்தி அங்கே அவர்களின் மூலமாக வெளிப்படுகிறது.

எனவே ஒரு கிறிஸ்தவ குடும்பம் அதிலும் அந்த குடும்பத்தை வழிநடத்துகிற தலைவராகிய, புருஷர் தனது குடும்பத்தை தேவ பக்தியிலும், நல் நடத்தையிலும், ஜாக்கிரதையான பேச்சிலும் ஒரு சமுதாயத்தில் வளர்க்கிறவராயிருக்க வேண்டியது எவ்வளவு அவசியம் பாருங்கள். எனவே தேவன் மீது வைத்திருக்கிற பக்தி, வைராக்கியமுள்ளதாக இருக்கட்டும் எந்த சூழ்நிலையிலும், ஆராதனையை முக்கியப்படுத்துகிற, ஊழியத்தில் பங்கெடுக்கிற குடும்பத்தை கட்டியெழுப்புங்கள்.

**ஏனோக்கு**

(ஆதி.5:24) ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான். ஒரு நல்ல குடும்ப வாழ்க்கை செய்த பரிசுத்தவான். இவரது பக்திக்கு அடையாளமே தேவனோடு வாழ்ந்ததே, ஒவ்வொரு நாளும் ஒரு குடும்பத்தலைவர் சந்திக்கிற ஏராளமான நெருக்கடிகளுக்கு மத்தியில் தேவனோடு வாழ்வதற்கு அர்ப்பணம் செய்திருப்பதே விசேஷமான தேவபக்தி. எனவே தேவனோடு வாழ்கிறதற்கு அடையாளமாக சபை ஆராதனையில் முழுமனதோடு குடும்பமாய் ஈடுபாடு காட்டுங்கள். (ஆதி. 6:9) நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான். தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான். இரட்சிக்கப்பட்டிருக்கிற சகோதரனே உன் இருதயம் ஆவியானவரால் வழி நடத்தப்படட்டும். பொல்லாத உலகில் நீதிமானாய், உத்தமனாய் வாழ்வது என்பது தேவனோடு வாழ்கிற அந்த அனுபவத்தில் தான் முடியும் என்பதை எண்ணிப்பார். சபையை பின்பற்று, ஆராதனையில் குடும்பமாய் பங்கெடு. ஊழியத்தில் தியாக தீயாய் வேலைசெய். கர்த்தர் உன்னைத்தான் புருஷனாய் உன் சபையில் வைத்திருக்கிறார்.

தவறான பக்தி முறையும் நம் நடுவில் இருக்கிறது என்பதை அறிந்திருங்கள் (கலா.4:9) இப்பொழுதோ நீங்கள் தேவனை அறிந்திருக்க அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க, பெலனற்றதும் வெறுமையானதுமான அவ்வழிபாடுகளுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி. இது உன்னுடைய பழைய சடங்காச்சார சம்பிரதாய முறைகளை விட்டு விலகியிருப்பதற்கு எச்சரிக்கையான பக்தி. கவனமாயிருங்கள்!

இரண்டாவது, தேவபக்தியை வெளிப்படுத்துகிறதற்கு (யாக்.1:26) உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும்.

நாவுதான் பல வேளைகளில் சமாதானத்தை கெடுத்துப்போடுகிறது. குடும்பவிரிசல், சண்டை, சச்சரவு, விட்டுக் கொடுக்காத வாழ்வு முறை இவையனைத்திற்கும் பேசும் வார்த்தை தான் முக்கியமாகிறது. அதிக பேச்சு பாவத்தில் கொண்டுபோய் விடுகிறது. நம் நாவு நெருப்பு மற்றும் அநீதி நிறைந்த உலகம், இது நம் சரீரத்தை கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தை கொளுத்திவிடுகிறதாய் இருக்கிறது (யாக்.3:6). இந்த நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது. மட்டுமல்ல, சாவுக்கேதுவான விஷம் நிறைந்த ஒன்றாக நாவு உள்ளது என யாக்கோபு (யாக். 3:8) விவரிக்கிறார்.

எலும்பில்லாத நாக்கானது எல்லாவற்றிலும் வளைந்து கொடுக்க முயற்சிக்கும். வார்த்தை பிரயோகமும் அப்படித்தான், இதற்கு கட்டுப்பாடு தேவை. எங்கு, யாரிடம், எதை பேச வேண்டுமேன திட்டமிட்டு வார்த்தைகளை உபயோகிப்பது நம்மை நல்ல புருஷனாக வெளிப்படுத்தும்.

**புருஷர்கள் தேவனுக்கு பயப்படுகிறவர்களாய் வாழுங்கள்**

பயப்படுதல் என்பது, பரிசுத்தமாக வாழும் வாழ்க்கைக்கு நேராக பயணம் செய்வது ஆகும். நம்முடைய பரிசுத்த வாழ்க்கை எங்கு தடம்புரள்கிறதோ, அங்கு தேவபயம் இல்லாதிருக்கிறது என்பதை அறியமுடியும்.

- தொடரும்



# நேரத்தை நிர்வகித்தல்

Rev. R. நெல்சன் ஞானகுமார்
இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியங்கள்.
மூத்த போதகர், திருவண்ணாமலை ஏ.ஜி. சர்ச்.



"நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்" (எபேசியா; 5:16).

1. நேர நிர்வகிப்பு என்றால் என்ன?
2. நேர நிர்வகிப்பின் அவசியம் என்ன?
3. நேரத்தை சரியாய் நிர்வகிக்காமையின் அடையாளங்கள் என்ன?
4. பொதுவாக நேரம் எவ்வாறு செலவிடப்படுகிறது?
5. திறமையாக நேரத்தை நிர்வகிப்பது எவ்வாறு?

## 1. நேர நிர்வகிப்பு என்றால் என்ன?

- நேர நிர்வகிப்பு என்பது நம்முடைய வாழ்க்கையின் இலக்குகளை அடைவதற்கேதுவாக நேரத்தை சரியாய் பயன்படுத்தக் கற்றுக்கொள்வது ஆகும்.
- நேர நிர்வகிப்பு என்பது இப்போது நமது நேரம் எப்படி செலவிடப்படுகிறது என்றும், இப்போது நமது நேரம் எப்படி செலவிடப்பட வேண்டும் என்பதையும் கண்டுபிடித்து சரியான முறையில் நேரத்தை செலவிடக் கற்றுக்கொள்வது ஆகும்.
- நேரத்தின் அதிகபட்ச நன்மையைப் பெறுவது (ஒரு கடிதத்தை எழுதி முடிக்க ஒரு நாள் முழுவதும் செலவழிக்கலாம். அதே நேரத்தில் நேரத்தை சரியாய் நிர்வகித்தால் 20 கடிதங்களையும் ஒரே நாளில் எழுதி முடிக்கலாம்).

## 2. நேர நிர்வகிப்பின் அவசியம் என்ன?

- நமக்கு இருப்பது ஒரே ஒரு வாழ்க்கை, அதுவும் சீக்கிரம் கடந்துபோம், எனவே கிடைத்திருக்கிற கிருபையின் நேரத்தை ஞானமாய் பிரயோஜனப் படுத்திக்கொள்ள வேண்டும் (எபே.5:15,16) (வாழ்க்கை ஒரு பயணம், கதை, புகை, புல், பூ, தரையில் விடப்பட்ட தண்ணீர் போல் சீக்கிரம் கடந்துபோய்விடும். ஆகையால் பயன்படுத்துவோம் திறமையாக).
- நேரம் கடவுள் கொடுத்த சமமான ஈவு எனவே நாம் எப்படி செலவு செய்கிறோம் என்பதைக் குறித்து ஆண்டவரிடம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் (1கொரி. 4:2).
- நேரத்தை கடைபிடிப்பதை வைத்தே வெற்றியாளனையும் தோல்வியாளனையும் அடையாளம் காணலாம். வெற்றியாளன், அவனுக்கிருக்கிற நேரத்தின் அதிகபட்ச பயன்பாட்டை பெற்றுக்கொள்வான்.
- நேரம் என்பது பணம், மக்கள் ........ போன்ற மற்ற மூல ஆதாரங்களைப்போல முக்கியமானது, விலையேறப்பெற்றது. எனவே அதை சரியாய் பயன்படுத்த கற்றுக்கொள்ள வேண்டும்.
- இழந்த நேரம் மீண்டும் கிடைப்பதில்லை. எனவே காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
- வீணாக நேரம் செலவழித்தல் சோம்பேறித்தனத்திற்கும், பாவத்திற்கும் நேராக நம்மை நடத்தும். சும்மாயிருக்கும் மனது பிசாசின் தொழிற்கூடம்.
- நாம் சரியாய் நேரத்தை கடைபிடிக்காவிட்டால் ஆண்டவர் நமக்குத் தருகிற முன்னேற்றத்திற்கேதுவான தருணங்களை தவறவிடுகிறோம் என்று பொருள்.

## 3. நேரத்தை திறமையாய் நிர்வகிக்காமையின் அடையாளங்கள் :

- குறிப்பிட்ட நேரத்திற்குள் வேலையை முடிக்க முடியாமை.
- அடிக்கடி கால தாமதமாய் போக வேண்டிய இடங்களுக்கு போவது.

- முக்கியமான வேலையை (Important) விட அவசரமான (Urgent) வேலைகளையே செய்துகொண்டிருப்பது.
- போதுமான ஓய்வு எடுக்க முடியாமை
- செய்கிற தொழில் தவிர வேதவாசிப்பு, குடும்பம், நண்பர்கள், உறவினர்கள், விளையாட்டு போன்ற காரியங்களுக்கு நேரமில்லாமை.
- எப்போதும் பதட்டத்தோடு காணப்படுவது.

**4. நேரத்தை திறமையாய் நிர்வகிக்க சிறந்த ஆலோசனைகள் :**

- முக்கியத்துவத்தின் அடிப்படையில் வேலையை வரிசைப்படுத்துங்கள். முக்கியமான வேலைகளுக்கு முன்னுரிமை கொடுங்கள்.
- முன்கூட்டியே நேரத்தை திட்டமிடுங்கள். ஒவ்வொரு நாளும் என்ன செய்ய வேண்டும் என்பதை ஒரு தாளில் எழுதி வைப்பது அவசியம் (To do list).
- சிலரிடம் சில நேரத்தில் முடியாது No என்ற வார்த்தையை சொல்ல கற்றுக்கொள்ளுங்கள்.
- கூடுமானவரை வேலைகளை பகிர்ந்தளியுங்கள்.
- காலம் தாழ்த்தாதிருங்கள், வேலைகளை முடிக்க இறுதி நேரம் (Dead Lines) நியமித்து அதற்குள் கூடுமானவரை வேலையை முடித்திடுங்கள்.
- உங்கள் நேரம் இப்போது எப்படி செலவிடப்படுகிறது என்பதை தாளில் எழுதி பார்த்தால் நாம் நேரத்தை எப்படி செலவிடுகிறோம். என்பதை தெரிந்துகொள்ள முடியும்.

**பொதுவாக நமது நேரங்கள் கீழ்க்கண்ட விதங்களில் செலவிடப்படுகிறது**

**A. திட்டமிடப்பட்ட செயல்கள்:**

ஏற்கனவே நாம் திட்டமிட்டபடியே செயல்படுவது.

**B. எதிர்பாராத வேலைகள் :**

நாம் எதிர்பாராத விதமாக தவிர்க்க முடியாத சில வேலைகள் வந்துவிடும்.

**C. மற்றவர்களுக்கு உதவி செய்வது :**

சில சமயங்களில் நாம் செய்ய தேவையில்லாத உதவிகளையும் அவர்களை பிரியப்படுத்துவதற்காக செய்கிறோம். மற்றவர்களுக்கு உதவி செய்வது நல்லது. ஆனால் அதே நேரத்தில் நம்முடைய வேலைகள் பாதிக்கப்படும் அளவிற்கு உதவி செய்ய வேண்டுவதில்லை.

**D. நேர வீணடிப்பாளர்கள்** (Time Thieves or wasters) :

உங்கள் நேரங்களை பொதுவாக வீணடிப்பது எது என்று கண்டுபிடித்து அகற்றுங்கள்.

1. நீண்ட நேர தொலைபேசி அழைப்புகள்.
2. வீண் பேச்சு, தூக்கம், தொலைக்காட்சி, கெட்ட நண்பர்கள், தேவையற்ற புத்தகங்கள், பொழுது போக்குகள்.
3. எதிர்பாராத விருந்தாளிகள்.
4. நபருக்காக, வாகனத்திற்காக காத்திருக்கும் நேரங்கள்.
5. பயண நேரங்கள்.
6. அதிக வேலைகள் இழுத்துப் போட்டுக்கொள்வது.
7. வேலையை முடிக்க இறுதி நேரம் தீர்மானிக்காமை.
8. சுயக்கட்டுபாடு இல்லாமை.

**உங்கள் நேரம் எப்படி செலவிடப்பட வேண்டும் என்பதை எழுதி யோசித்து திட்டமிடுங்கள் :**

நம்முடைய எல்லா பொறுப்புகளையும் நேர்த்தியாய் செய்ய நேரங்கள் ஒதுக்கப்பட வேண்டும். (தொழில், குடும்பம், உறவினர்கள், தனிப்பட்ட வாழ்வு).



# தமிழ் பிரதேச மிஷனரி இயக்கம்
## வடமேற்கு

**Rev. K. அனந்தன் அலெக்ஸாண்டர்**
மண்டல தலைமைப் போதகர், அம்பாசமுத்திரம்
ரீஜனல் தலைவர், வடமேற்கு மிஷனரி இயக்கம்

TAMIL DISTRICT MISSIONS India and beyond...

## அந்தியோகியா சபையும், மிஷனரி ஊழியமும்

ஆண்டவரும் இரட்சகருமாகிய தேவனின் இணையற்ற நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

அந்தியோகியா சபை நமக்கு கற்றுத்தரும் பாடம் என்ன? ஒரு சபை எப்படிப்பட்ட நோக்கத்துடன் காணப்பட வேண்டும் என்பதை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

**1. அந்த சபையில் தீர்க்கதரிசிகளும், போதகர்களும் இருந்தார்கள் :** (அப்போஸ்தலர் 13:1)

தேவன் ஊழியர்களை ஏற்படுத்தினதின் நோக்கம் என்ன (எபேசியர் 4:11-13) என்பதை பார்க்கும்போது தேவ குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும் பரிசுத்தவான்கள் சீர்பொருந்த, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காக, கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடையவே தேவன் ஊழியர்களை ஏற்படுத்தினார். ஊழியர்கள் தன் ராஜ்ஜியம் கட்ட அல்ல, தன் புகழுக்கு அல்ல, தன் விருப்பம் நிறைவேற்ற அல்ல. தேவன் நம்மை ஏற்படுத்தின, தெரிந்தெடுத்த பிரதான நோக்கம் என்ன என்பதை புரிந்து செயலப்பட வேண்டும்.

**2. அந்த சபையில் கர்த்தருக்கு ஆராதனை இருந்தது, உபவாசித்து ஜெபித்தார்கள் :** (அப்போஸ்தலர் 13:2)

இன்றைய ஆராதனை எல்லாம் ஜனங்களை சந்தோஷப்படுத்துவதாகவும், உற்சாகப்படுத்துவதாகவும், திருப்திபடுத்துவதாகவும் உள்ளதே தவிர, தேவனை உயர்த்துவதாக இல்லை. தேவனுக்கு கொடுக்க வேண்டிய மகிமை ஆராதனை நடத்துகிறவர்களுக்கு போகிறது. இன்றைய உபவாச ஜெபம் என்ற போர்வையில் திருச்சபைகளும், பல பிரபல்யமான ஊழியர்களும் தங்கள் நோக்கம், விருப்பம் நிறைவேற்றவே நடத்துகிறார்கள். எனவே தான் அன்று பரிசுத்தாவியானவர் அவர்களோடு தொடர்புகொண்டு பேசியது போல இன்று தேவ வார்த்தை தீர்க்கமாக இல்லாமல் போய்விட்டது. நமது சபைகளும் தேவனை உயர்த்தி, தேவசமுகத்தை அசைக்கிற ஜெபமாய், தேவ சத்தம் கேட்கும் சபையாக மாற அர்ப்பணிப்போம். தேவனை உயர்த்துவோம், தேவனிடம் ஜெபிப்போம். கூடியிருக்கும் இடம் அசையும், கட்டுகள் அவிழும்.

**3. அந்த சபை தேவன் அழைத்த ஊழியத்திற்காக ஆட்களை அனுப்பியது :** (அப்போஸ்தலர் 13:2)

தேவன் நமக்குத் தந்த தலையான ஊழியம் என்ன? சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷம் பிரசங்கிப்பது (மத்தேயு 24:14; 28:19; மாற்கு 13:10), தேவன் தமது ஊழியர்களை அழைத்த நோக்கம் அரசியல் சம்பந்தமான பணிகளோ அல்லது சமுதாய முன்னேற்ற பணிகளை செய்வதற்கோ எந்த நபரையும் அனுப்பினதாக

வேதத்தில் காணவில்லை. நமது சிறந்த பணி ஜனங்களுக்கு சுவிசேஷம் அறிவித்து, கிறிஸ்துவண்டை அழைத்து வந்து அவர் ராஜ்ஜியம் கட்டப்பட வேண்டும் என்பதே. ஒரு திருச்சபை பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதல்படியும், ஆவியானவரின் செயல்பாடுகளை உணர்ந்து செயல்படுவதாக இருக்க வேண்டும்.

**4. அந்த சபை ஊழியர்களை அனுப்பினது :** (அப்போஸ்தலர் 13:3)

உபவாசித்து, கூடிஜெபித்து, ஆராதித்த சபையில் தேவன், தான் அழைத்த ஊழியத்திற்கு அனுப்பு என்று பேசினாலும், அவர்கள் ஊழியர்களை அனுப்புவதற்கு முன்பு உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்து அனுப்பினார்கள். இதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்ன?

ஒரு சபை ஒரு மிஷனரியை அனுப்பும்போது அவருக்காக, பாரத்துடன் ஜெபிக்க வேண்டும். ஏதோ எங்கள் சபையிலிருந்தும் ஒரு ஊழியரை, மிஷனரியை நாங்களும் அனுப்பியுள்ளோம் என்று சொன்னால் போதாது. அந்த மிஷனரிக்காக எவ்வளவு பாரத்துடன் அக்கறையுடன் ஜெபிக்கிறோம். தேவன் அவர்களை பாதுகாக்கவும், ஊழியத்தில் அனுகூலமான வாசல்கள் திறக்கப்படவும், சாதகமான சூழ்நிலை ஏற்படவும், தேவனால் வல்லமையாக பயன்படவும் கூடி ஜெபிப்பது நமது முக்கியமான கடமை ஆகும் (எபேசியர் 6:18,19,20).

மேலும் அவர்கள் மேல் கைகளை வைத்து அனுப்பினார்கள், அதில் இரண்டு வித காரியம் என் மனதில் உண்டாகியது.

a) தேவனின் பிரதான நோக்கம் நிறைவேற்ற தேவையான பெலன், அதிகாரம், வல்லமை உண்டாக (அப்போஸ்தலர் 6:6; 1 தீமோத்தேயு 4:14) கைகளை வைத்தார்கள்.

b) எங்களின் கரம் உங்களுக்கு எப்பொழுதும் ஆதரவாக, உதவியாக இருக்கிறது என்பதை காட்டுகிறது. அதாவது ஜெபித்து மிஷனரிகளை அனுப்புவது மட்டும் அல்ல. பணம், பொருள், உதவி செய்யவும் நம் கரத்தை நீட்ட வேண்டும் (லூக்கா 10:7; 3யோவான் 6-8; பிலிப்பியர் 4:10; 14-19)

இப்படிப்பட்ட தேவநோக்கத்துடன் தேவ சித்தப்படி, பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதல்படி செயல்படும் திருச்சபைகளாக இருக்க நம் ஸ்தாபன திருச்சபைகளுக்கும், நமக்கும் தேவன் அனுக்கிரகம் செய்வாராக.

## மிஷன் கன்வென்ஷன்

மார்ச் 28 அன்று கோவை தெற்கு மண்டலத்தின் சார்பாக மிஷன் கன்வென்ஷன் சிறப்பாக நடைபெற்றது. அதில் 200 பேர் கலந்துகொண்டனர். Rev.எட்வின் பிரபாகர் அவர்கள் சிறப்பு செய்தியாளராக கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். அம்மண்டலத்தின் தலைமைப்போதகர் Rev.ஜேம்ஸ் வில்லிங்சன் மற்றும் மண்டல மிஷன் பொறுப்பாளர் Rev.கிளமெண்ட் அவர்களும் சிறப்பாக ஒழுங்குபடுத்தியிருந்தார்கள்.

**விஸ்வகர்மா (இந்து) மக்களினத்திற்காக ஜெபியுங்கள் :**



| | | |
|---|---|---|
| **மக்கள் இனம்** | : | விஸ்வகர்மா (இந்து) |
| **மொழி** | : | தெலுங்கு, கனடா, தமிழ் |
| **மக்கள் தொகை** | : | 77,61,000 |
| **கிறிஸ்தவர்கள்** | : | 0.11% |
| **அதிகம் வாழும் பகுதி** | : | ஆந்திர பிரதேசம், கர்நாடகா, தமிழ்நாடு |

**நம்பிக்கை :** கலையின் (Art) அதிபதி விஸ்வகர்மா தான் என நம்பும் இவர்கள் விஸ்வகர்மாவை தெய்வமாக வணங்குகின்றனர். இவர்கள் தங்களை விஸ்வவகர்மாவின் சந்ததிகளாகவும் கருதுகின்றனர். கோவில் சிலைகளை வடிவமைப்பத்தோடு, ஆன்மீக வழிகாட்டியாகவும், மத ஆசாரியர்களாகவும் ஈடுபடுத்திக் கொள்கின்றனர்.


**தத்தெடுத்துள்ள மண்டலம்:** நாகப்பட்டினம்

## ஜெப விண்ணப்பங்கள்

- நாம் தாங்குகிற மிஷனரி மற்றும் அவர்களது குடும்பங்கள் கொள்ளை நோய்களுக்கும், பெலவீனங்களுக்கும் விலக்கி தப்புவிக்கப்பட.
- மிஷனரிகளின் பொருளாதார தேவைகள் சந்திக்கப்படவும், மாதந்தோறும் அனுப்பப்படுகிற உதவித்தொகை தடையில்லாமல் அனுப்பப்படவும் ஜெபிப்போம்.
- மிஷன் பணித்தளங்களில் காணப்படுகிற உபத்திரவங்கள் மாறவும், உபத்திரப்படுத்துகிறவர்கள் மனந்திரும்பவும், அதிகாரிகளின் கண்களில் தயவு கிடைக்கவும் ஜெபிப்போம்.
- கொரோனா ஊரடங்கு நாட்களிலும் மிஷன் பணித்தளங்களில் ஊழியம் செய்வதற்கு தடைவராமல், தொடர்ந்து ஆராதனைகள், ஊழியங்கள் நடைபெற ஜெபிப்போம்.
- மிஷன் பணித்தளங்களில் ஆலயங்கள் கட்டப்படவும், சொந்த இடங்கள் வாங்கப்படவும், புதிய மிஷனரிகள் சபைகளிலிருந்து எழும்பவும் ஜெபிப்போம்.
- வட மாநிலங்களில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் உண்டாகவும், சந்திக்கப்படாத மக்களினங்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.





# தமிழ்பிரதேச மத்திய வாலிபர் ஊழியம்

**Rev. D. சாலமோன்**

President, Christ Ambassadors

ஆண்டவரும் அருமை இரட்சகரும், மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் கிறிஸ்துவின் ஸ்தானிகர் ஊழியங்கள் சார்பில் அன்பின் வாழ்த்துக்கள்.

## CA- CHRIST'S AMBASSADORS கிறிஸ்துவின் ஸ்தானிகர்


கிறிஸ்துவின் ஸ்தானிகர் என்பது வாலிபர்கள் மத்தியில் இயங்கும் ஊழியம். தேவனுடைய மாபெரும் கிருபையால் 1967-ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த இயக்கமானது கடந்த 54 ஆண்டுகளாக தேவனுடைய இராஜியத்திற்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருந்து வருகிறது. நமக்கு முன் இருக்கும் Decade of Revival 2020-2030 இக்காலத்தில் CA ஊழியமானது தொடர்ந்து செய்ய இருக்கிற தேவனுடைய இராஜிய பணியைக் குறித்து இப்பக்கங்களில் உங்களோடு பகிர்ந்துகொள்கிறோம்.

## வாலிப ஊழியத்தின் தேவையும் அதன் முக்கியத்துவம்

## THE NEED AND IMPORTANCE OF YOUTH MINISTRY

வேதாகம நாட்களிலும், ஆதித் திருச்சபை நாட்களிலும், இன்றைய திருச்சபை காலத்திலும் தேவன் வாலிபர்களை பயன்படுத்துவதும், வாலிபர்களைக் குறித்து தேவன் கொண்டுள்ள திட்டம் மிகவும் பெரியது. (யோவேல் 2:28). இது அனைவரும் அறிந்ததும் அனுபவித்ததுமான உண்மை. கடைசி கால எழுப்புதலில் வாலிபர்களின் பங்கு மிக இன்றியமையாதது.

## யார் வாலிபர்கள்? வயதின் அடிப்படையில்:




மனித ஆயுள் சக்கரத்தில் குழந்தைப்பருவம், வாலிபப்பருவம், புருஷப்பருவம், முதிர்பருவம் என்ற நிலைகள் இருக்கிறது. அதில் வாலிப பருவமானது 13 முதல் 30 வரை உள்ள ஆண்கள், பெண்களை 'வாலிபர்கள்' என்று அழைக்கிறோம்.

## சாதனையா? சோதனையா?

இந்த வயது பிரிவுகளில் வளரும் இருபாலருக்கும் இருக்கும் தேவைகள், அவர்கள் சந்திக்கும் பிரச்சனைகள், சவால்கள், ஏற்படும் மாற்றங்கள், அவர்களின் எதிர்பார்ப்புகள் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கிறது. இந்த இயற்கை மாற்றங்களை புரிந்து செயல்படுவோருக்கு வாழ்க்கை சாதனையாகவும், மற்றவர்களுக்குச் சோதனையாகவும் மாறுகிறது. பல நேரங்களில் இது தவறு, இதை செய்யாதே, அவன் சரியில்லை என்று சுட்டிகாட்டி வாலிபர்களைத் தீர்ப்பு செய்கிறோம். அதேசமயம் எதினால் தவறு என்றும், எது சரி, எப்படி செய்ய வேண்டும் என்று வழிநடத்த தவறுகிறோம்.

## பெசலெயேல்

வேதத்தில் நல்ல உதாரணமாக தேவ திட்டமாகிய ஆசரிப்பு கூடாரம் அமைக்கும் பணியில் பெசலெயேல் தனக்கு கொடுக்கப்பட்ட தங்கம், வெண்கலம், வெள்ளி, மரம், நூல் போன்ற பொருட்களைப் பயன்படுத்தி, தேவ இராஜிய பணியை நிறைவேற்றினது போல நமக்கு தேவன் கொடுத்துள்ள வாலிபர்களின்

தனித்தன்மையை உணர்ந்து, புரிந்து அவர்களை தேவனுடைய திட்டத்திற்குள் அவர்களை வழி நடத்துவது அவசியம். அவ்வாறு செய்வது சுலபமல்ல, நடைமுறையில் பல சவால்களை பெற்றோரும், ஸ்தலசபை போதகர்களும் சந்திக்கிறோம். நம் அனைவரின் ஏக்கமும் நம்முடைய வாலிபர்கள் பலன் உள்ள நிலையில் வளர வேண்டும் என்பதே.

## CA வின் பங்கு

கடந்த 54 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட CA ஊழியத்தின் தொடர்ச்சியாக வாலிபர்களைப் புரிந்து கொள்ளவும், வாலிபர்களின் திறமைகள், தாலந்துகள், ஆக்கபூர்வமான கருத்துகள், ஐக்கிய செயல்பாடுகள், ஜெபங்கள் ஆகியவை தேவனுடைய இராஜிய பணியில் பயன்பட வாஞ்சிக்கிறோம்.


## தேவ இராஜியத்திற்குரிய வாலிபர்கள்

இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தி அடைந்தார். லூக்கா 2:52. அந்த பிள்ளை வளர்ந்து ஆவியிலே பலங்கொண்டது. லூக்கா 1:80. யோவான் ஸ்நானன், இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் அவர்களை குறித்து சொல்லப்பட்ட வாலிப வயதின் வளர்ச்சியில் சமநிலையாக இருப்பதை உணர முடிகிறது.




"பூரண புருஷன்", "தேறினவர்கள்", "பலவான்கள்" போன்ற வார்த்தைகளால் சமநிலை வளர்ச்சி அறியப்படுகிறது. நம்முடைய திருச்சபை வாலிபர்கள் வாழ்க்கையிலும் தேவன் விரும்பும் வளர்ச்சி சொந்த அனுபவமாகிட வேண்டும். கிறிஸ்தவ விசுவாச குடும்பத்தில் இருக்கும் வாலிபர்கள் திருச்சபையின் எதிர்கால சீஷர்களாய் இருக்கிறார்கள். Bon hoeffer என்பவர் இவ்வாறு கூறுகிறார். The pursuit of purity is not about suppression of lust, but about the reorientation of ones life to a larger goal. பரிசுத்தம் என்பது பாவத்தை அடக்கி வைப்பது அல்ல மாறாக ஒரு மிகப்பெரிய இலக்கை நோக்கி வாழ்க்கையின் திசையை மாற்றியமைப்பதாகும். இவற்றை கற்றுக்கொடுக்க தவறும் பட்சத்தில் வாலிபர்கள் ஒன்றுமில்லாத மாயையில் சிக்கிக்கொள்கிறார்கள்.

## WEBMINAR AND OTHER MEETING




CA வின் முயற்சியாக ஒருங்கிணைந்த வேத போதனைகளை, பொதுவான தலைப்புகளில் அந்தந்த வயது பிரிவிலுள்ள இருபாலருக்கும், ஊழியர் பிள்ளைகளுக்கும் பிரயோஜமான செய்திகளை தொடர்ந்து பகிர்ந்து கொள்ள இருக்கிறோம். வாலிப தலைமைத்துவப்பயிற்சி Online (Webminar, Zoom app) மூலம் நடத்தப்படும். உங்கள் கேள்விகள், சந்தேகங்கள் இருப்பின் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். CA ஊழிய குழுவினர் உங்களுக்கு உதவ ஆயத்தமாயிருக்கிறார்கள்.

## WEBSITE AND ANDROID APP. AGCA

CA சம்மந்தமான தகவல்களை அதில் மூலம் அறிந்து கொள்ள வசதியாக AGCA என்ற பெயரில் Android app, AGCA Website செயல்பாட்டில் உள்ளது. நமது வாலிபர்கள் ஜெபிக்கிறவர்களாய், பரிசுத்தத்திலும், வல்லமையிலும், வைராக்கிய வாஞ்சையிலும், நோக்கத்திலும் தொடர்ந்து மிகுந்த பலனுக்கேதுவாக வாழ தேவன் எழுப்புதலை காணச்செய்வாராக! இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்....



# To whom will your children vote for?

**Rev. பெகின் சாமுவேல்**
(AGCM Director)

ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த பரிபூரண ஜீவன் இதழ் வாயிலாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்ப்பிரதேச சிறுவர் ஊழியங்களை நீங்கள் ஜெபத்தில் தாங்குகிறீர்கள் என்பதை அறிந்து உங்களுக்கு என் நன்றியை தெரிவிக்கிறேன். தொடர்ந்து வரும் மாதங்களில் சிறுவர்கள் மத்தியில் நடைபெற இருக்கும் ஊழியங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

இந்த இதழிலும் பெற்றோர்களாகிய உங்களுக்கு சில ஆலோசனைகளைக் கூற விரும்புகிறேன். ஏப்ரல் 6 அன்று நீங்கள் அனைவரும் உங்கள் வாக்குகளை செலுத்தி நமது மாநிலத்தை அடுத்த 5 வருடங்களுக்கு ஆளுவதற்கான கட்சியை தெரிந்தெடுத்தீர்கள். நமது தெரிந்தெடுப்பு சரியில்லையெனில் அடுத்து வரும் 5 வருடங்களுக்கு நாம் அதற்குரிய பலனை அநுபவிக்க நேரிடும். ஜனநாயக இந்தியாவில் வாழும் ஒவ்வொரு குடிமகனுக்கும் இது ஒரு தலையாய கடமையாகும். இதை நீங்கள் அனைவரும் ஜெபத்துடன் தேவ வழிநடத்துதலின்படி செய்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். நமது தெரிந்தெடுப்பு மிக கவனமாய் எல்லா நேரங்களிலும் இருக்க வேண்டும்.

வேதத்தில் ஒரு மனிதன் தன்னுடைய குடும்பத்துக்காக மிகச்சிறந்த சரியான தெரிந்தெடுப்பை தேர்வு செய்தான். பரிசுத்த வேதாகமத்தில் யோசுவா என்ற குடும்பத்தலைவனுடைய தெரிந்தெடுப்பு எந்த சந்தேகத்திற்குமிடமின்றி மிகச் சரியான தெரிந்தெடுப்பாக கருதப்படுகிறது. "யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்...நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்" (யோசுவா 24.15) என்பதே அந்த தீர்மானம். ஆங்கில வேதாகமத்தில் "Choose for yourselves this day whom you will serve... But as for me and my household, we will serve the LORD" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்று பெற்றோர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்க வேண்டிய சில காரியங்களை பார்ப்போம். 18 வயது ஆன பின்புதான் வாக்களித்து தன்னுடைய தலைவரைத் தேர்ந்தெடுக்கும உரிமை உள்ளது. ஆனால் சிறுபிள்ளைகள் இயேசுவைத் தங்கள் வாழ்வில் தேர்ந்தெடுக்க வயது அவசியமில்லை. எனவே அவர்களுக்கு கீழ்க்கண்ட சில காரியங்களைக் கற்றுக்கொடுங்கள்.

1. இயேசுவைத் தலைவராக தெரிந்தெடுக்க கற்றுக்கொடுங்கள் (To elect JESUS as their leader).

குடும்பத்தலைவன் அல்லது தலைவி என்பதில் இதுவரை உங்களுடைய பெயரே பல இடங்களில் இடம் பெற்றிருக்கலாம். ஆனால் உண்மையாக குடும்பத்தின் தலைவராக இயேசுவை வையுங்கள். அவரிடமே எல்லா காரியங்களின் ஆலோசனைக்கும் செல்லட்டும். நீ என்னைப் பின்பற்றி வா (மத். 8.22) என்று இயேசு கூறியிருக்கிறார்.

**ஏன் இயேசுவை தலைவராக தெரிந்தெடுக்க வேண்டும்?**
**பரிசுத்த ஆட்சி (வாழ்வு)**

தலைவராய் இவ்வுலகில் நாம தேர்ந்தெடுக்க விரும்புகிற யாவரும்

பாவத்திற்குள்ளாகவே உள்ளனர். இயேசுவோ நான் பரிசுத்தர் என்று வாக்குரைத்தபடியே வாழ்ந்து காட்டினார். அவர் நம்மையும் பரிசுத்தமாக மாற்ற வல்லவர். அவரை நாம் தெரிந்தெடுத்து அவருடைய ஆளுகைக்கு நம் வாழ்க்கையை ஒப்புக்கொடுப்போம்.

**சமாதான ஆட்சி (வாழ்வு)**

இவ்வுலகம் சமாதானமின்மையில் நிறைந்து காணப்படுகிறது. கொலை, கொள்ளை இன்னும் சமாதானத்தைக் கெடுக்கும் பல காரியங்கள் நிறைந்த கலவர பூமியாகவே இருக்கிறது. சமாதான பிரபுவாகிய இயேசுவோ என்னுடைய சமாதானத்தையே கொடுக்கிறேன் என்கிறார். உலகில் உள்ள எந்த தலைவராலும் இந்த வார்த்தையைக் கூற முடியாது. அவரை தலைவராக ஏற்றுக்கொண்டால் அவர் தரும் சமாதானம் நம்முடைய உள்ளத்தை நிறைக்கும்.

**ஆசீர்வாதமான / செழிப்பான ஆட்சி(வாழ்வு)**

விலைவாசி உயர்வு, பற்றாக்குறைகள், குறைவுகள் மத்தியில்தான் இன்றைய உலகம் காணப்படுகிறது. ஆனால் இயேசுவை தெய்வமாக கொண்ட பிள்ளைகளுக்கு இந்தக் குறைவுகளின் மத்தியிலும் செழிப்பைத் தர அவர் வல்லவராயிருக்கிறார்.

**நித்திய ஆட்சி(வாழ்வு)**

இன்றைய காலக்கட்டத்தில் அரசியல்வாதிகள் தேர்தல் நேரத்தில் பல வாக்குறுதிகளை அள்ளி வீசுவர். ஆனால் தேர்தல் முடிந்தபின்பு அவைகளை முற்றிலுமாக மறந்து விடுவர். அவர்களது ஆட்சிக்காலங்கள் எல்லாம் 5 அல்லது 10 வருடங்களுக்குள் நிறைவுற்றிடும். ஆனால் நித்திய நித்திய காலமாய் ஆட்சி செய்யும் வல்லமை கொண்டவர் இயேசு ஒருவரே. அவர் ஆட்சிக்கு முடிவே கிடையாது. அவர் நமக்கென்று கொடுத்த வாக்குறுதிகளை நிச்சயமாய் நிறைவேற்றுவார். பொய் சொல் தேவன் ஒரு மனிதன் அல்ல. மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல. அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா? (எண். 23.19) என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

**2. பிரச்சாரம் செய்ய (சுவிசேஷம் அறிவிக்க) கற்றுக்கொடுங்கள்** (To do campaign for JESUS)

தங்கள் தலைவராகிய இயேசு தங்கள் வாழ்வில் செய்ததை மற்றவர்களுக்கு அறிவிக்க கற்றுக்கொடுங்கள். அவருடைய போதனைகள், வாழ்க்கையை எடுத்துக்கூறுங்கள். குடும்பமாக இயேசுவின் சுவிசேஷத்தை அறிவிக்க உறுதி எடுங்கள். உங்கள் மூலமாக அவரது அரசாட்சி துரிதமாக உருவாகட்டும். உங்கள் வாழ்வில் தினமும் சந்திக்கிறவர்கள், பழகுகிறவர்களிடம் சுவிசேஷத்தை அறிவியுங்கள்.

**3. பிரதிநிதியாக இருக்க கற்றுக்கொடுங்கள்** (To be a representative of JESUS)

தலைவன் எவ்வழியோ மக்களும் அவ்வழி என்பது பழமொழி. அரசியல் வாழ்வில் கட்சியின் பிரதிநிதியாக இருப்பவர்கள் தலைவரைப் போன்று உடுத்துவார்கள். தலைவரைப் போன்று பேசுவார்கள். தலைவருக்குப் பிரியமானதை செய்வார்கள். நம்முடைய பிள்ளைகளும் தலைவராகிய இயேசுவின் பிரதிநிதிகளாக அவருடைய வழியில் நடந்து, அவரைப்போன்ற குணாதிசயங்களை வெளிப்படுத்தி அவருடைய பிரதிநிதியாக இவ்வுலகில் வாழ கற்றுக்கொடுப்போம்.

தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

## ஹேப்பி நியூஸ்!
## ONLINE AGVBS 21

இந்த ஆண்டு மே மாதத்தின் VBSக்காக அனைவரும் காத்துக்கொண்டிருப்பீர்கள். எந்த லாக்டவுண் அறிவிப்புகள் இருந்தாலும் கவலைப்பட வேண்டாம். இந்த வருடமும் கடந்த ஆண்டைப் போல ஆன்லைன் VBS யாக நடத்தப்பட உள்ளது. கடந்த ஆண்டைப் போன்று Sourcefile ஐ நீங்கள் வாங்கி உங்கள் சபைக்கு ஏற்றாற்போல் edit செய்து உபயோகிக்கலாம். உங்களுக்கு பாடப்புத்தகங்கள் PDF வடிவில் தேவையெனில் உங்களுக்கு அனுப்பி வைக்க AGVBS Team ஆயத்தமாக உள்ளது. சிறப்பாக AGVBS ஐ நடத்த இப்போதே திட்டமிடுங்கள்.

**பின்குறிப்பு :** புத்தகங்களை வாங்கி நீங்கள் பயன்படுத்த விரும்பினால் கடந்த ஆண்டு புத்தகங்களை குறைந்த விலையில் கொடுக்க ஆயத்தமாக உள்ளோம். அதையும் நீங்கள் வாங்கி பயன்படுத்தலாம். 100 (பிள்ளைகளுக்கு) புத்தகங்களின் விலை Rs. 200 மட்டுமே. ஸ்டாக் உள்ளவரை மட்டுமே.

**AGVBS இது நம்ம VBS**

## மெகா வேதவினா போட்டி – 2021



**வேதபகுதி : மீகா, மத்தேயு, மாற்கு**

**நாள் : செப்டம்பர் 19, ஞாயிறு**

### மண்டல அளவில் நடைபெறும் போட்டிகள்

**போட்டிக்கான வேதபகுதி**

| மனப்பாட வசனம் : பிரசங்கி<br>Memory Verse : Ecclesiastes | வேதவினா போட்டி : 1 சாமுவேல்<br>Bible Quiz : 1 Samuel |
|---|---|

## 7S PRAYER DURING THIS PANDEMIC



**STOP:** Pray that the Lord will relent and stop the pandemic.

**SICK** : Pray for those affected by the disease be cured.

**SORROWING** : Pray for those who lost their loved ones to the disease, be comforted.

**SUFFERING** : Pray for the daily wagers, migrants, and all those are affected by the lockdown to be supplied of their basic needs.

**SALVATION** : Pray that people should come to the saving knowledge of the Lord Jesus Christ.

**SAFETY** : Pray that God would protect health and security personnel who serve in the frontline.

**SCIENCE** : Pray that God would give the researchers and medical professionals the needed wisdom and insight in understanding the disease so that it is better treated and controlled



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


## பாஸ்டர். பெவிஸ்டன்

பரமன்குறிச்சி, நாசரேத் மண்டலம்


ஹாய் குட்டீஸ்.. எல்லாரும் எப்படி இருக்கிறீங்க.. வித்தியாசமான சூழல்.. விடுமுறை நாட்கள் தான் ஆயினும் வீட்டை விட்டு வெளியே போக முடியல. கொரோனாவின் இரண்டாவது அலை அதிவேகமாக பரவுவதை கேள்விப்படுகிறோம். மனதில் கொஞ்சம் படபடப்பு தான். ஆயினும் பாதுகாக்கும் தெய்வம் நம்ம பக்கம் தான் இருக்கிறாங்க.. அதே நேரம் சிறு பிள்ளைகளாக இருக்கிற நாம் ரொம்ப கவனமாக இருக்கனும். மாஸ்க் இல்லாம வெளிய போயிடாதீங்க.., அடிக்கடி கைகளையும் கால்களையும் கழுவுங்க.. யாரையும் தொட்டு பேச விரும்பாதிருங்க.. உங்களுக்காக நாங்கள் ஒவ்வொரு நாளும் ஜெபிக்கிறோம். தைரியமா இருங்க.. ஒக்கே எல்லாரும் கதை கேட்க ரெடியா?

ஒரு குரங்கு, மனிதர்களைப் போல உபவாசிக்க விரும்பியது. காலை முதல் மாலை வரை உபவாசம் இருக்க முடிவு செய்து, தனிமையான ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டது. ‘முழுக்க முழுக்க கடவுளின் சிந்தனை மட்டுமே இருக்கணும். என்ன தான் பசியெடுத்தாலும் சாப்பிடக்கூடாது’ என்று திட்டவட்டமாக முடிவெடுத்து, கடவுளை குறித்து சிந்திக்க ஆரம்பித்தது. தியான நேரத்தில் பக்கத்தில் நின்ற ஒரு மரத்தில் குலை குலையாய்ப் மாம்பழங்கள் பழுத்துத் தொங்குவதை கண்டதும் நாக்கில் எச்சில் சுரந்தது.

‘இல்லை, நான் பின்வாங்க மாட்டேன். என் உறுதியைக் குலைக்க எதனாலும் முடியாது. உபவாசம் முடிந்த பின்னர் சாப்பிட்டுக் கொள்ளலாம்‘ என நினைத்துக்கொண்டே முகத்தை இறுக்கமாக வைத்து கண்களை மூடிக் கொண்டது. சற்று நேரத்தில் அணில் கூட்டம் அந்த மரத்திற்குப் படையெடுத்தது. பழங்களைக் கொறித்துக் கொறித்துக் குதறி போட்டுவிட்டு கொட்டையை தூக்கி குரங்கின் மீது வீசியது. ‘இதென்னடா வம்பாப் போச்சு! உபவாசம் முடிக்கும் போது நமக்கு ஒரு பழம் கூட இருக்காது போலிருக்கே! சரி இப்போ தானே சாப்பிடக்கூடாது, கொஞ்சம் பழத்தை பறிச்சு கைல வச்சுக்கிட்டா அப்புறம் சாப்பிடலாமுனு நினைத்து அணில் கூட்டத்தை விரட்டி சில பழங்களை பறித்து தன் கையில் வைத்துக்கொண்டது. தொடர்ந்து தியானத்தை தொடர்ந்தது.

பழங்கள் நன்கு பழுத்திருந்தன. வாசனை அபாரமாக இருந்தது. சிறிது நேரத்திற்கு பின் தாக்குபிடிக்க முடியல. ‘சாப்பிடத்தானே கூடாது? கடவுள் நினைவுடன் வாசனையை மட்டும். நுகர்வோம்‘ என கையில் எடுத்து முகர்ந்தபடியே தியானத்தை தொடர்ந்தது.

ருசியும் பசியும் கவர்ந்திழுக்க தன்னை அறியாமலேயே கையிலிருந்த பழம் குரங்கின் வாயில் நுழையவே கொஞ்சம் அழுத்தமாகக் கவ்விக்கொண்டது. பதறியது… ஐயோ பாவம் செய்து விட்டேனே.. கடித்த ஒரு துண்டினையும் காறி உமிழ்ந்தது.

‘கடவுளிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டே கடித்த பழத்தின் ருசியை எண்ணிப்பார்த்தது. ச்ச.. பழத்தின் சாறு நாவில் பட்டதும் சகலமும் மறந்து போனது. ‘சரி. இவ்வளவு தூரம் நடந்து போச்சு! இன்னொரு நாளைக்கு உபவாசம் இருப்போம்.. ஆகா, என்ன ஒரு சுவை! ‘கிடைத்த பழங்களையெல்லாம் பறித்து வயிறு முட்ட சாப்பிட்டு ஏப்பம் விட்டது.

அன்பு தம்பி தங்கச்சி.. எத்தனை முறை நீங்கள் நல்ல நல்ல தீர்மானங்களையெல்லாம் எடுத்துவிட்டு இடையிலேயே நிறைவேற்ற முடியாமல் தடுமாறியுள்ளீர்கள். ஆம், நம் வாழ்வில் நம்மையும் அறியாமல் செய்யும் சின்ன சின்ன தவறுகள் தான் நாம் தேவனுக்குள் எடுத்த பெரிய பெரிய தீர்மானங்களை சிதைத்து விடுகிறது. சின்ன தவறுகளை துவக்கத்திலேயே கிள்ளி எறிந்தால் நாம் பாதுகாக்கப்படுவோம்.

கிறிஸ்துவை முன் வைத்து செயல்படும் உங்கள் கவனத்தை எப்படியாகிலும் திசை திருப்ப பிசாசு தீவிரமாய் முயற்ச்சிக்கிறான். தொலைக்காட்சி மூலம், செல்போன் மூலம், தவறான நண்பர்கள் மூலம் எப்படியாகிலும் உங்கள் நேரத்தை திருடி உங்களை திசை திருப்ப பார்க்கிறான்.

இந்த லாக்டவுண் நாட்களில் நமது சரீரத்தை பாதுகாக்க, தொற்று கிருமி நம்மை அணுகாமலிருக்க நாம் எவ்வளவு எச்சரிக்கையாய் இருக்கிறோம். அதுபோலவே உங்கள் ஆத்துமாவை பாதுகாக்கவும் எச்சரிக்கையாயிருங்கள்.

'நீ உன் வழியை மாற்றிமாற்றி இவ்வளவாய் விலகிப்போகிறது என்ன?' (எரே.2:36),

மனன வசனம்: 'நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்' (எபி.12:1).

இந்த மாத சிறுவர் பகுதி நிச்சயம் உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்கள் கருத்துக்களை தீர்மானங்களை 97503 81784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தியாக அனுப்பி வைக்க மறவாதிருங்கள். அடுத்த இதழில் வேறொரு சுவாரசியமான கதையோடு உங்களை மறுபடியும் சந்திக்கிறேன். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

---

## போட்டி எண் - 86 (சரியான விடைகள்)

**யோவேல்** : 1.கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்; | 2.பட்டயங்களாகவும், ஈட்டிகளாகவும்; | 3.சந்தோஷம்

**ஆமோஸ்** : 1.புத்திமான்;|2.ஒருமனப்பட்டிருந்தாலொழிய; | 3.ஆசகேலின் வீட்டிலே தீக்கொளுத்துவேன்; | 4.சோலைகளிலும் திராட்சத்தோட்டங்களிலும் அத்தி மரங்களிலும் ஒலிவமரங்களிலும் மிகுதியானதைப் பச்சைப்புழு அரித்துப்போட்டது; | 5.நஞ்சாகவும், எட்டியாகவும்; | 6.பாவிகளெல்லாரும்; | 7.குதிரையில்மேல் ஏறுகிறவன்; | 8.பெத்தேல்; | 9.சௌந்திரியமுள்ள கன்னிகைகளும் வாலிபரும் தாகத்தினால்.

**ஒபதியா** : ஏசா வம்சத்தார்.

**யோனா** :1.யோனா; | 2.நினிவே; | 3.பொய்யான மாயையைப் பற்றிக்கொள்கிறவர்கள்.

**மீகா** : 1.வயல்களை இச்சித்துப் பறித்துக்கொண்டு, வீடுகளை இச்சித்து எடுத்துக்கொண்டு, புருஷனையும் அவன் வீட்டையும், மனுஷனையும் அவன் சுதந்தரத்தையும் ஒடுக்குகிறவர்களுக்கு; | 2.சிநேகிதனை, வழிகாட்டியை; | 3.கோலினால்; | 4.கழுகைப்போல; | 5.நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை; | 6.ஆசாரியர்கள்; | 7.வேதமும், கர்த்தரின் வசனமும்.

**நாகூம்** : 1.உன் அரண்களைப் பலப்படுத்து, சூளையைக் கெட்டிப்படுத்து; | 2.அரணைக் காத்துக்கொள், வழியைக் காவல்பண்ணு.

## போட்டி எண் : 86 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை**: R.மாது; ராணி பிளஸ்ஸிங்; K.ராஜீ; S.எப்சிபா; K.சுபா; M.தங்கமணி; J.இவாஞ்சலின்; J.ஆண்ட்ரூஸ்; T.சாந்தி; R.மணிமேகலா; R.மயில்; N.ரோஸ்லின்; E.இம்மானுவேல்சாம்; K.ஏஞ்சல்; A.மஞ்சு; S.முத்துலெட்சுமி; V.விஜி; K.பூங்கோதை ; S.மாரிமுத்து தாவீது; K.மகேஸ்வரி; S.எஸ்தர்கலா; A.மேரி; K.மஞ்சு; T.ரம்யா; J.சுமதி; L.குளோரி; T.கலா; R.மரகதம்; E.கலா; S.பிரேமலதா; S.பிரியா; A.புனிதவள்ளி; M.ராதாமணி; M.கனகவல்லி; S.கந்தையா; A.தமிழ்செல்வி; V.கலை; | **ஸ்ரீவில்லிபுத்தூர்** : டெய்சிராணி; ஜெயராணி; சத்யா; ஆபிரகாம்; சாரா; புஷ்பா; நித்யா; அனிதா; குளோரி; நெல்சன் செல்வராஜ்; நாச்சியார்; | **திருநின்றவூர்** : சிவானந்தம்; ராஜேஸ்வரி; ரோசி; சுமதி; சிவராஜ்; அம்மு; S.திரேசா; புவனேஸ்வரி; | **தேனி** : கிறிஸ்டினா ரேகா; பூமணி ஜான்சி; திரவியச்செல்வி; ராகேல் கார்த்திகேயாயினி; தனம்; கிரேஸி; பிரின்ஸி; லீலாவதி; மேரி மரகதம்; அன்புக்கனி; மீனா; |**இறச்சகுளம்** : ஜேஸ்மின்; T.ஷோபா; கவிதாஸ்ரீ; M.கலா; நளினா ஷாலினி; ஜெஸி; மோனிஷ்; எஸ்தர்; |**ஆலங்குளம் (வி)** : ஸ்டெல்லா; ஜெயபாரதி; பிளாரன்ஸ்; உமா ரோஸ்லின்; ஸ்டீபன்;|**மதுரை** : கனகவல்லி; விஜிலா; ஞானம்; கனிமொழி; சுபத்ரா; |**வந்தவாசி** : அபிகாயில் மீனா; அபிஷா சுமதி; ரக்ஷிதா; இவாஞ்சலின்| **கொட்டிவாக்கம்**: எப்சிபா; அஞ்சலி; சாரா;செல்வி; **சென்னை**: M.அமுதவல்லி; மெர்லின் ஹெலன் பிரீத்தியா; M ராஜேஸ்; ரூபி |**பெருந்துறை**: ஜெனிபர்; அஸ்வின்; ரோமுலஸ் சுபாஷ்;| **அச்சிறுப்பாக்கம்** : செல்வமேரி; ரஞ்சனா; கல்பனாதேவி;டாரத்தி; ரேஷ்மா; தமிழ்ச்செல்வி;|**பரமத்திவேலூர்** : ராஜலெட்சுமி; சௌமியா; பாமா |**திருவள்ளூர்** : இம்மானுவேல்; மினிவசந்தம் |**எடப்பாடி** : ஜோசப்மேரி; அரசு அஞ்சலி; | **நாசரேத்**; எஸ்தர்; தாசன்மோசஸ்; | **முத்தையாபுரம்**: காபிரியேல்; ஜீவிதா; |**தூத்துக்குடி** : பானுமதி; தங்கமாரி;| **கிச்சிப்பாளையம்** : ஜெயரூபி; பவித்ரா; | **களூர்** : ரூத்; J.தெரசா | **திசையன்விளை** : செல்வபாக்கியம்; ஜெயசீலி; | **அந்தமான்** ;ஜேக்லின்; கெத்சியாள்; | **திருச்சி**: கிறிஸ்டி மகாலஷ்மி; சகாயராஜ்; | **திருப்பூர்** : செண்பகம்; ஜீன் மெரிலின் கிருபா; | **ஜலகண்டபுரம் (சே)** : ஜெயராஜ்; கவிதா; | **KTC நகர் (தி)** : சில்வியா; பிரேமாரூத்; | **சேடபட்டி** : பியூலா கல்யாணி; குளோரி; | **கடையநல்லூர்** : ஸ்டெல்லா; ஆஷாதேவி; நளினி; | **சிட்லப்பாக்கம்** : ரேணுகா; | **கோவை** : கிறிஸ்டினா அபிகாயில்; ரோஸ்லின் சாந்தி; மேரி டென்சில்; அன்சி பிரதாப்; | **ஆண்டிபட்டி** : ஹெலன் மார்கிரேட்; | **புளியங்குடி** : சுந்தரி; **குற்றாலம்** :ரூத்; வேளாங்கனி; |**கெட்டி (நீலகிரி)** : சார்லஸ்; | **T.N.பாளையம்** : சுஜா; **தஞ்சாவூர்** : தேவகுமார்; | **திருச்சிராப்பள்ளி** : ஆரோக்கிய பிரவின்; | **கடலூர் (வி)** : S.சுகிர்தா; **கம்பம்:** ஜோதிமணி; | **புன்னைக்காயல்** : சோனியா; **கொங்கந்தான்பாறை** : சந்திரா; | **பழங்காநத்தம்** : தமிழ்செல்வி; | **ஓசூர்** : ஐடா; | **விளாத்திகுளம்** : கீர்த்தனா | **ஏர்காடு** : டேவிட்; | **உவரி** : ஜேனட்; | **பாளையங்கோட்டை** : சாந்தகுமாரி; **பத்மமேரி** : வாணி; | **வேலூர்**: வில்லியம் மார்டின் லூதர் | **ஆசாரிபள்ளம்** : மரியநேசம் : | **விள்ளாளன்விளை** :சாம் டெல்ரின்; | **நாகப்பட்டினம் கீழ்வேலூர்** : கிரேனாப்பு; | **திருப்பத்தூர்** : கிரிஜா சத்யா; | **ஆழ்வார்திருநகரி** : பனிமலர் | **அச்சங்குன்றம்** : பிரேமா | **பழங்குளம்**: பொன்மணி அதிசயராஜ்; | **பேயன்விளை** : பிரேமா | **பண்ணைவிளை (தூ)**:செஃபீபி ஷெக்கினா | **திண்டிவனம்** : சாராள் அறிவுச்செல்வி; | **சின்னாளப்பட்டி** : சலோமி; | **நேர்குன்றம் (செ)** : ஆலிஸ்மேரி; | **வத்ராப்**: கல்பனா; | **நெட்டப்பாக்கம் (பு)** : கிறிஸ்டினாரூபி; | **திப்பிராயப்பேட்டை (புதுவை)** : டெல்பின் விண்ணரசி | **பெரியகுளம்**: மனோகாசிராஜ்; | **கோடம்பாக்கம் (செ)** : அருள்மேரி; | **ஒட்டப்பிடாரம்** : கோமதி; | **கஞ்சிகோயில் (ஈ)** : கீர்த்தனா; | **காக்களூர்** : டெனிஸ்லா; | **பெங்களூர்** : தேவபிரியா; | **சாத்தூர்** : கீதா வசந்தகுமாரி; | **ஆறுமுகநேரி** : சுகிர்தா;| **பழனி**: பிரீத்தி | **கிருஷ்ணகிரி** : எமிமா ரூத்.

## பரிபூரண ஜீவன் போட்டி எண் - 87

**(ஆபகூக் முதல் மல்கியா வரை இருப்பிடத்துடன் விடை எழுதவும்**

### ஆபகூக்

1. எது கூப்பிடும் எது சாட்சியிடும்?
2. எது தன் தன் மண்டலத்தில் நின்றன?
3. எது சிவிங்கிகளிலும் வேகமாய் இருக்கும்?

### செப்பனியா

1. பயப்படாதே என்றும் -------- பார்த்து உன் கைகளை -------- என்றும் சொல்லப்படும்.
2. -------- தேடுங்கள் -------- தேடுங்கள் -------- தேடுங்கள்.
3. அவர்கள் -------- அவர்கள் -------- அவர்களைத் --------

### ஆகாய்

1. எவைகளை இன்னும் ஒருதரம் அசையப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்?
2. எவைகளை சிந்தித்துப்பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்?

### சகரியா

1. கர்த்தர் -------- முதல் முதல் இரட்சிப்பார்?
2. யார் அழுக்கு வஸ்திரம் தரித்தவனாய் தூதனுக்கு முன்பாக நின்றிருந்தான்?
3. -------- யார் அசட்டைப்பண்ணலாம்?
4. எது கிழே தள்ளப்பட்டது?
5. -------- மாதமாகிய பதினோராம் மாதம்.
6. எந்த ராஜாவின் நாட்களில் பூமியதிர்ச்சிக்கு தப்பி ஓடிப்போனார்கள்?
7. தானியம் -------- புது திராட்சரசம் -------- வளர்க்கும்.
8. யார் பராக்கிரமரைப்போல இருப்பார்கள்?
9. -------- அப்பொழுது -------- சிதறிப்போகும்.
10. மரக்காலின் நடுவிலே உட்கார்ந்திருந்தது யார்?
11. -------- என்னும் ஒன்பதாம் மாதம்.
12. மாம்சமான சகலமான பேர்களே -------- மௌனமாயிருங்கள்.
13. செப்பனியாவின் குமாரனாகிய இவன் யார்?
14. எருசலேம் -------- என்றும் -------- பரிசுத்த பர்வதம் என்றும் அழைக்கப்படும்.

### மல்கியா

1. -------- நான் வெறுக்கிறேன்.
2. -------- நான் வெறுத்தேன்.
3. நான் -------- நான் --------
4. நான் கற்பித்த நியாயப்பிரமாணமாகிய --------, -------- நினையுங்கள்.

| | |
|---|---|
| விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 05.06.2021 | சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள் தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும். |



### விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி

**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## பாளையங்கோட்டை, கொங்கந்தான்பாறை, புது வழி ஏஜி சபை ஆலய பிரதிஷ்டை (10.02.2021)










## போச்சம்பள்ளி ஏஜி சபை ஆலய பிரதிஷ்டை (9.04.2021)









## Antioch Biblical Seminary & College 20th Graduation (8.04.2021)





Registered News Paper Regd. No. 8206 / 62




BOOK POST

If Undelivered please return to

**PARIPOORANA JEEVAN**

30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165